உ

கடவுள் துணை.

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள்
வரப்பிரசாதியாய்த் திருவண்ணாமலையில்
எழுந்தருளியிருந்த

அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

இஃது
மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை-இட்டா.

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது.
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1900.

உ

கடவுள் துணை.

திருப்புகழ்.

காப்பு.

வெண்பா.

எல்லாருஞானத் தெளிஞரேகேளீர்சொல்
கல்லெல்லாமாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக்கேட்குமோ கானமயில்வீரன்
திருப்புகழைக்கேட்குஞ் செவி.

கலிவிருத்தம்.

திருப்புகழ்படிக்குமவர் சிந்தைவலுவாலே
யொருத்தரைமதிப்பதிலே யுன்றனருளாலே
பொருப்பபரைமிகப்பொருது வென்றமயின்மீதே
தரித்தொருதிருத்தணிகை நின்றபெருமாளே.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

ஏறுமயிலேறிவிளை யாடுமுகமொன்றே
ஈசனுடன்ஞானமொழி பேசுமுகமொன்றே

கூறுமடியார்கள்வினை தீர்க்குமுகமொன்றே
குன்றுருவவேல்வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடுசூரரை வதைத்தமுகமொன்றே
வள்ளியைமணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமானபொரு ணீயருளல்வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெருமானே.

விநாயகர் துதி.

க. தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன-தனதான.

கைத்தலநிறைகனி யப்பமொடவல்பொரி
கப்பியகரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறையவர்
கற்பகமெனவினை கடிதேகு
மத்தமுமதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தளவயிறனை யுத்தமிபுதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரி னின்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புரமெரிசெய்த வச்சிவ னுறைதர
மச்சது பொடிசெய்த வதிதீ

வத்துயராதுகொடு சுப்பிரமணிபடு
மப்புன மதனிடை யிபமாகி
யக்குறமகளுட னச்சிறு முருகனே
யக்கண மணமருள் பெருமாளே

சுப்பிரமணியர் துதி.

உ. தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன—தனதான.

முத்தைத்தரு பத்தித்திருநகை
யத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர னெனவோது
முக்கட்பரமற்குச்சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமூ வர்க்கத்தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே

இத்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கக நடிக்கக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டக்கலைகொடு
சித்ரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குதரிகிடக மெனவோதுங்
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்புற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வெற்றிப்பொரவல பெருமாளே
திருப்பரங்கிரி.

ரு. தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன—தனதான.

அருக்குமங்கையர் மலரடிவருடியுங் கருத்தறிந்தபின
ரைதனி லுடைதனை யவிழ்த்துமங்குள வரசிலைதடவியு
மிருதோளுற், றனைத்துமங்கையி னடிதொருநகமெழ வு

தட்டைவென்றுபா லிடுகுறிகளுமிட வடிக்களந்தனின் ம
யில்குயில்புறவென மிகவாய்விட், டுருககுமங்கியின் மெ
ழுகெனவுருகிய சிரத்தைமிஞ்சிடு மனுபவமுறுபவ முல
க்கையின்கனி நிகரெனவிலகிய முலைமேல்வீழ்ந், துருக்
கலங்கிமெ யுருகிடவமுதுகு பெருத்தவுந்தியின் முழுகி
மெயுணர்வற வுழைத்திடுங்கன கல்வியைமகிழ்வது தவி
ர்வேனோ, இருக்குமந்திர மொழிவகைமுனிபெற வுரை
த்தசம்ப்ரம சரவணபவகுக விதத்தவிங்கித மிலகியவரு
முக வெழில்வேளென, திலக்கணங்களு மியலிசைகளுமி
க விரிக்குமம்பல மதுரிதகவிதனை யியற்றுசெந்தமிழ் வி
தமொடு புயமிசை புனைவோனே, செருக்குமம்பல மிசை
தனிலசைவற நடித்தசங்கரர் வழிவழியடியவர் திருக்கு
லந்தடியருள்பெறவருளிய குருநாதா, திருக்குழந்தையு
மெனவவர்வழிபடு குருக்களின்திற மெனவருபெரியவர்
திருப்பரங்கிரி யுறைபவசரவண பெருமாளே.

ச. தனத்தனந்தன தனதன தனதன

தனத்தனந்தன தனதன தனதன

தனத்தனந்தன தனதன தனதன—தனதான.

கருக்குமஞ்சனவிழியிணை யியல்கொடு நெருக்கிநெ
ஞ்சுறவெறிதருபொழுதொருகனிக்குளின்சுவையமுதுகு
மொருசிறு நகையாலே,களகமொடுங்கலி வலைகொடுவிசி
றிய மனைக்கெழுந்திரு மெனமனமுறுகவோர்கவற்சிகொ
ண்டிட மனை,தனிலழகொடு-கொடுபோகி நறைத்தபஞ்ச
ணை மிசைதனின்மனமுறவளைத்தனந்தலினிணைமுலையெ
திர்பொர நகைத்தழுந்திட வமுதிகழ்பருகிய-மிடறாடே
கடித்தெழுங்குரல்குமுகுமுகுமுவெனவிசைத்துநன்கொ
டு மனமதுமறுகிட நழுப்புநஞ்சன சிறுமியரற - வருள்
வாயே,நிறைத்ததெண்டிரைமொகுமொகுமொகுவெனவு
ரைத்தகஞ்சுளிமுடிநெருநெருவெனநிறைத்தவண்டமுகி
டுகிடுகிடுவென-வரைபோலும், நிவர்த்ததிண்கழ னிசிசர
ருரமொடு சிரக்கொடுங்குவை மலைபுரைதரவிரு நிணக்
குழம்பொடு குருதிகள்சொரிதர - வடிதீரா, திறக்கருங்
குழலுமையவளருளுறு புழைக்கைகும்முதகயமுகமிகவு
ள சிவக்கொழுந்தென கணபதியுடன் வரு-மிளையோனே
சினத்தொடுஞ்சம னுதைபடநிறுவிய பரற்குளன்புறு பு
தல்வநன்மணியுகு திருப்பரங்கிரி தனிலுறை சரவண
பெருமாளே.

௫. தனதந்தன தந்தனதந்தன
தனதந்தன தந்தனதந்தன
தனதந்தன தந்தனதந்தன—தனதான

மருவும்படி மதனனிங்கித மதனென்றிடு மம்புலி யுஞ்சுடுதழல்கொண்டிடு மங்கையர்கண்களின்-வசமாகி, சயிலங்களு மன்றல்பொருந்தியபொழிலின் பயில்தென்ற லுமொன்றிய தடவஞ்சனை துன்றியெழுந்திடு திறமான, இரவும்பக லன்றியுநின்றிடு குயில்வந்திசைதந்தனவென் றிட விருகண்கள் துயின்றிடவன்றியு மயலான, விவனெ ன்சுப தன்டதனென்றிடு முடல்கொண்டுவருந்திய வஞ்ச க னினியுன்றன் மலர்ந்திலகும்பத மடைவேனோ, திரு வென்றில்விளங்கிய வண்டர்கள்மனை யின்றி யிருண்டவ னெண்டிசை திகழும்புகழ்கொண்டவன் வண்டமிழ் பயி ல்வோர்பின்; திரிகின்றவன் மஞ்சுநிறம்புனைபவன் மின் சுதிறங்கொள் வென்றடல் செயதுங்கமுகுந்தன் மகிழ்ந் தருள் மருகோனே, மறுவுங்கிடறுந்துமியுங்குட முழவ ங்கள் குமின்குமினென்றிட வயமொன்றியசெந்திலில்வந் தருள்முருகோனே, மதியுங்கதிரும புயலுந்தின மருகும் படி யண்டமிலங்கிடவளர்கின்றபரங்கிரிவந்தருள் பெரு மாளே.

சு. தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான-தனதான

வரைத்தடங்கொங்கையாலும்வளைப்படுஞ்செங்கையாலு மதித்திடுங்கொண்டையாலு மனைவோரும்; வடுப்படுந்தொண்டையாலும் விளைத்திடுஞ் சண்டையாலு மருட்டிடுஞ்சிந்தைமாதர் வசமாகி; எரிப்படும்பஞ்சுபோல மிகக்கடுந்தொண்டனேனு மெனப்படுந் தொந்தவாரி கரையேற; விசைந்திடுஞ்சந்தபேத மொழிந்திடுந்தண்டைசூழு மிணைப்பதம்பண்டரீக மருள்வாயே; சுரர்க்குவஞ்சஞ்செய்சூரன் விளக்கிரௌஞ்சம்மதோடு துளக்கெழுந்தண்டகோள மளதாகத்; துரத்தியன்றிந்த்ரலோக மழித்தவன்சம்பிரதாயஞ் சுடப்படுஞ் சண்டவேலை விடுவோனே; செருக்கெழுந்தும்பர்சேனை துளக்கவென்றண்டமூடுந் தொனித்திடுஞ்சங்கபாணி மருகோனே; தினைப்புனஞ்சென்றுலாவு குறத்தியின்பராகுந் திருப்பரங்குன்றமேவு பெருமாளே.

எ. தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த-தனதான

கருவவைந்துபத்துற்றதிங்கள் வயிறிருந்துமுற்றிப் பயின்றுபடையில் வந்துதித்துக் குழந்தே வடிவாகி; கருவியங்கெடுத்துச் சுறந்தமுலையருந்திவிக்கிக்கிடந்து கதறியங்கை கொட்டித்தவழ்ந்து நடமாடி; அரைவடங்கள்கட்டிச் சதங்கையிடு குதம்பைபொற் சுட்டிதண்டையவையணிந்து முற்றிக்கிளர்ந்து வயதேறி; யறியபெண்கணட்பைப்புணர்ந்து பிணியுழன்று சுற்றித்திரிந்த மியனுன்கருபைச் சித்தமென்று பெறுவேனோ; இரவியிந்த்ரன்வெற்றிக்கிறங்கி னரசரென்று வொப்பற்றவுந்தி யிறைவனெண் கினக்கர்த்தனென்று நெடுநீல; நெரியனும்மறுத்துச் சிறந்த வனுமனென்று மொட்பற்றவண்ட ரெவரும்நதிவர்க்கத்தில்வந்து புனமேவ; அறிறதன்படைக்காத்தனென்று மசுரர்தன்கிளைக்கட்டைவென்ற வரிமுகுந்தன் மெய்ப்பித்த பண்பின்மருகோனே; பயனையும்படைத்துச்சினந்து வுலகமும்படைத்துப்பரிந்து வருள்பரங்கிரிக்குட் சிறந்த பெருமாளே.

அ. தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன-தனதான

மன்றலங்கொந்துமிசை தந்தனந்தந்தவெனவண்டி னங்கண்டுதொடர் குழன்மாதர்; மண்டிடுந்தொண்டைய முதுண்டுகொண்வயின்மிகவம்பிடுங்கும்பகன தனமார்பின்; ஒன்றலம்பொன்றவிழி கண்டவகங்குழையவுந்தியெ ன்கின்றமடு விழுமேனே; யுன்சிலம்புங்கன தண்டையுங் கிண்கிணியு மொண்கடம்பும்புனேயு மடிசேராய், பன்றி யுங்கொம்புகம டம்பயங்கஞ்சுரர்கள்மண்டையென்பங்க மணி பவர்சேயே; பஞ்சரங்கொஞ்சுகிளி வந்திருந்தைந் துகர பண்டிதன்றம்பியெனும் வயலூரா, சென்றமுன்கு ன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர் சண்பகம் பைம் பொன்மலர் செறிசோலே, திங்களுஞ்செங்கதிரு மங்குலு ந்தங்குமுயர் தென்பரங்குன்றிலுறை-பெருமாளே.

திருச்செந்தில்.

௯. தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன-தனதான

கமலமாது மருந்ததியுந்துதி செயவொணுத மடந் தையர்சந்தன களப சீதள கொங்கை யிலங்கையி லிரு

போதே, களவுநூல்தெரி வஞ்சனையஞ்சன விழியின்
மோகித கந்தசுகந்தரு கரியவோதியி லிந்துமுகந்தனின்
மருளாதே, அமலமாகிய சிந்தையடைந்த கலதொலைவி
லாதவறம்பொருளின்பமு மடையவோதி யுணர்ந்துதணி
ந்தபி னருள்தானே, யறியுமாறு பெறும்படியன் பினி
னினியநாத சிலம்புபுலம்பிடு மருணவாடக கிண்ணிதங்
கிய வகுதாராய், குமரிகாளி பயங்கரி சங்கரிகவுரிநீலி பர
ம்பரை யம்பிகை குடிலைகோகினி சண்டினி குண்டலி
யெமதாயி, குறைவிலாளுமை மந்தரியந்தரி வெகுவிதாக
டி சுந்தரிதந்தருள் குமரிமூஷிகமுந்தியவைங்கரகணராய
ன்; மமலிவிநாயக னஞ்சுமிழ்கஞ்சுகி யணிகஜானன லின்
பமெனரம்புலி மவுலிபாநெரு சிந்தையுகந்தரு ளிளையோ
னே; வளரும்வாழையுமஞ்சளு மிஞ்சியுமிடைவிடாதுநெ
ருங்கியமங்கல மகிமைமாநகர் செந்தியில் வந்தருள்-பெ
ருமாளே.

௰. தனதனன தந்ததந்தன
தனதனன தந்ததந்தன
தனதன்ன தந்ததந்தன—தனதான

இருகுழை யெறிந்த கெண்டைக ளொருகுமிழடர்
ர்துவுந்திட வீணைலெநிந் தெழுந்திட வணைமீதே, யி

ருளளக பந்திவஞ்சியி னிருகலையுடன்குலைந்திட விதழ
முதருந்துசிங்கியின்மனமாய; முருகொடுகலந்த சந்தன
வளருபடு குங்குமங்கமழ்முலை முகடுகொண்டெழுந்தொ
ரு முருகார; முழுமதிபுரந்த சிந்தூரவரிவைய ருடன்கல
ந்திடு மறிவிலனலம்பிறந்திட வருள்வாயே; எரிவிடநிமிர்
ந்த குஞ்சினியினிலவொடு வெழுந்தகங்கையு மிதமியொ
டணிந்தசங்கரர் களிகூறு, மிமையவர்தருங்கருங்குயில்
மரகதநிறந்தருங்கிளி யெனதுயி ரெனுந்தரியம்பிகைபெ
றுவாழ்வே; அரைவடம்சிலம்பு கிண்கிணிபரிபுரநெருங்
குதண்டைக ளணிமணிசதங்கைகொஞ்சிட-மயின்மீதே;
யகமகிழ்வுகொண்டு சந்ததம்வருகுமரமுன்றலின்புறவலை
பொருதசெந்தில்தங்கிய பெருமாளே.

[] ஞறுவிழியிடந்துலங்கிட; எனவும்பாடவும்

கக. தந்ததானன தானன தந்ததானன தானன
தந்ததானன தானன தனதான.

வெஞ்சரோருகமோகடு நஞ்சுமோர் கயலோநெடு
வின்பசாகரமோவடு வகிரோமுன்; வெந்துபோன புரா
தன சம்பராரியு ராரியைவென்ற சகாயமோகரு விளை
யோக;ணஞ்சமோயம தூதுயர் நெஞ்சமோ வெனுமாம

டநங்கைமாதர் பயோதரமிகமூழ்கி;சங்கையோவிருகூத
ளகந்தமாலிகைதோய்தரு தண்டைசேர்கழலீவது மொ
ருநாளே;பஞ்சபாதகதாருகதண்டனீறெழுவாருவர்பண்
டுபோலமராபதிகுடியேற; பங்கயாசனர் கேசவரஞ்சலே
யெனமாலவனை பங்கநீரெழவேல்விளைமிளையோனே;செ
ஞ்சடாடவி மீமிசைகங்கை மாதவிதாதகிதிங்கள் சூடிய
நாயகர்பெருவாழ்வே; செண்பகாடவி யாகிய துங்கமாம
தில் சூழ்தரு சோதின்மாநகர் மேவியபெருமாளே.

௧௨. தனனதனதன தனதனதனதன
தனனதனதன தனதனதனதன—தனதான

களபமொழுகிய புளகிதமுலையினர் கடுவுமமிர்தமு
ம்விரவியவிழியினர் கழுவுசரியழ கொழுகிறகுழலினறெ
வரோடும், கலகமிடுகய லெரிகுழைவிரிகியர் பொருளிலி
லைஞரையழிபடுமொழிகொடுதளரவிவர் தெருவினிலெவ
ரையு நகையாடிப்; பிளவுபெறி லதிலளவளவொழுகியர்
நடையிலுடையினி லழகொடு தரிபவர் பெறுகுபொருள்
மெரிலமளியிலிமொடு குவைவோடே; பிணமுமணைபவர்
வெறிதறுபுனலுணும் வசவவவனிதையர்முடுகொடு ம

ணைபவர் பெருமையுடையவ ரரவினைவிடவருள் பிரிவா யே; அளையிலுறைபுலி பெறுமகவயிராது பசுவினிரைமு லை யமுதுண நிறைமகள் வசனொடுபுலிமுலையுணமலையிட னுறுகாநீ;ளடவிதனிலுள வுலவைகள் தளிர்விட மறளா தமொடு களிறுகள்பிடியுட னகவெளியுயர் பறவைகணி லம்வர விரல்சேரோழ்; தொளைகள்விடுகழை விரன்முறை தடவிய விசைகளபலபல தொனிதரு கறுமுகில்சுறுதி யுடையவனெடியவன் மனமகிழ் மருகோனே; துணைவரு ணத்ர சரவணபவநம முறுககுரு பரவளரறுமுககுக து றையில்லையெறி திருநகருறைதரு-பெருமாளே.

௧௬. தந்ததனதான தந்ததனதான

தந்ததனதான-தனதான

கன்றிவரு நீலகுங்குத படீருகஞ்சமலர்மேவு முலை காட்டிக்; கங்குல்செறிகேச நின்றுகுலையாமை கண்கள கடைகாட்டி விலைகாட்டி; நன்றுபொருடீது வென்றுவி லைபேசி] நம்பிவிடுமாத ருடனாட்ட; நஞ்சுபுசிதேனா ய ங்கமதுவாக நைந்துவிடுவேனுக் கருள்வாயே; குன்றி மணிபோல செங்கண்வரிநாகங் கொணட படமவீசு மணி கூர்வாய்; கொண்ட மயிலேறி குன்றிடய மோதி சென்ற வடிவேலைக் கொடுபோர்செய்; மன்றல் கமழ்பூ

கந்தெங்குதிரள்சோலை வண்டுபடவாவி புடைசூழ; மந்
திரடமாடுஞ்செந்திநகர்மேவு மந்தசுரகாலப்பெருமாளே.

௰௪. தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன-தனதான.

அனிச்சங்கார்முகம் வீசிடமாசறு துவட்பஞ்சான
துதடாகம்விடாமட வனத்தின்றாவி குலாவியசீறடி மட
மானா; ரருக்கன்போலொளி வீசியமாமர கதப்பைம்பூ
ண்ணி வார்முலைமேன்முக மழுத்தும்பாவிய னாவியிடே
றிட நெறிதாராய்; வினைச்சண்டாளனை வீணனைநீணிதி
தனைத்தாண்டாணவ மானநிர்மூடனை விடக்கன்பாய்நுக
ர் பாழனையோர்மொழி பகராதே; விகற்பங்கூறிடு மோ
கவிகாரனை பறத்தின்பாலொழு காதமூதேவியை விழித்
துன்ப துகை நீதரநானருள் பெறுவேனோ; முனைச்சங்
கோலிடு நீலமகோததி யடைத்தஞ்சாத விராவணனீள்
பல முடிக்கன்றேர்கணை யேவுமிராகவன் மருகோனே;
முளைக்குஞ்சீதநி லாவொடுபாய்விரி திரைக்கலங்காநதி
தாதகிகூவிள முடிக்குஞ்சேகரற் பேரருளால்வரு முரு
கோனே; தினைச்செங்கானக வேடுவரானவர் திகைத்தங்

தோவெனவேகணியாகிய திறற்கந்தாவளி நாயகிகாமுரு மெழில்வேலா; சிறக்குந்தாமறை யோடையின்மேடையில் நிறக்குஞ்சூல்வளை பால்மணிவீசிய திருச்செந்தூர்வரு சேவகனேசுரர் பெருமாளே.

---

௧௫. தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த-தனதான.

கருவிலுருவாகிவந்து வயதளவிலேவளர்ந்து கலைகள்பலவேதெரிந்து மதனாலே; கரியகுழன்மாதர்தங்க ளடிசுவடுமார்புதைந்து கவலைபெரிதாகிநொந்து மிகவாடி, அரகரசிவாயவென்று தினமுநினையாமனின்று மறுசமயநீதியொன்று மறியாம; லசனமிடுவார்கடங்கள் மனைகவலைவாசனின்று மனுதினமுநாணமின்றி யழிவேனோ, உரகபடமேல்வளர்ந்த பெரியபெருமாளரங்க ருலகளவுமான்மகிழ்ந்த மருகோனே; வபயகுலதீபதங்க விருதுகவிராஜசிங்க முறைபுகலியூரிலன்று வருவோனே; பரனவமனைமீதிலன்று வொருபொழுதுதூதுசென்ற பரமனருளா

ல்வளர்ந்த குமரேசா, பகையசுரர்சேனைகொன்று வமரர் சிறைமீளவென்று பழனிமலைமீதினின்ற பெருமாளே.

௰௬. தனதன தத்ததானன
தனதன தத்ததானன
தனதன தத்ததானன-தனதான.

கதியைவிலக்குமாதர்கள் புதியவிரத்னபூஷண கனதனவெற்புமேன்மிகு மயலான, கவலைமனத்தனுகிலு முனதுபரசித்தமாகிய தனதனமொத்தமேனியு முகமாறும் அதிபலவச்ரவாகுவு மயினுனிவெற்றிவேலையு மரவுபிடித்ததோகை முலகேழு; மதிரவரற்றுகோழியு மடியர்வழுத்துவாழ்வுறு மபிநவபத்மபாதமு மறவேனே; இரவிகுலத்திராசத மருவியெதிர்த்துவீழ்கடு ரணமுகசுத்தவீரிய குணமான, விளையவனுக்குநீண்முடி யரசதுபெற்றுவாழ்வுற இரதகடத்துராகவன் மருகோனே, பதினொருத்திராதிகள் திகழ்விளக்குமாளிகை பரிவொடுநிற்குமீசுரர் சுரலோகம்; பரிமளகற்பகாடவி யரியளிசுற்றுபூவுதிர் பழநிமலைக்குண்மேவிய பெருமாளே.

௰௭. தானதந்ததனத் தானதந்ததனத்
தானதந்ததனத்-தனதான.

காரணிந்தவரைப் பாரடைந்துவிளைக் காதனெஞ் சயரத் தமொழி, கானரம்புதிரத் தோல்வழும்புறுபொ ய்க் காயமொன்றுபொருத் தடியேனும்; தாரிணங்குகுழ ற்கூறணிந்தவிழிச் சாபமொன்றுநுகற் கொடியார்தந்,தா ள்பணிந்தவர்பொற்றேள்விரும்பிமிகத் தான்மெலிந்து விடத் தகுமோதான்; சூரர்துண்டுபடப் போர்கடந்து தொழத்தோயமுஞ்சுவறப் பொருவேலா, தூய்மைகொ ண்டகுறத் தோகைநின்றபுனச் சூழ்பெறுங்கிரியிற் றிரி வோனே, ஆரணன்கருடத் தாரணன்புகழ்தற் காலமு ண்டவருக் குரியோனே, யாலையம்பழனச் சோலையின்பு டைசுற் றுவினன்குடியிற் பெருமாளே.

திருவேரகம்-சுவாமிமலை.

ம௮. தனதனன தனதனன தனதான தத்ததன
தனதனன தனதனன தனதான தத்ததன [ன
தனதனன தனதனன தனதான தத்ததன--தனதா

குமரகுருபரமுருககுகனேகுறச்சிறுமி கணவசரவ ணநிருதர்கலகாபிறைச்சடையர் குருவெனநவிலுரையுத வு மயிலாவெனத்தினமு முருகாதே, குயின்மொழிநன்ம டவியர்கள் விழியாலுருக்குபவர் செருவிலெனவரதமன மெனவேகடப்பர்நகை கொடுமெவர்களுடைமை மனமுட

ணைபறிப்பவர்க ளனைவோருந், தமதுவசமுறவசியமுக மேமினுக்கியர்கள் முலையிலுறுதுகில்சரிய நடுவீதிநிற்ப வர்கள் தனமலியர்மனமுறிய நழுவாவுழப்பியர்கண் வலையாலே, சதிசெய்பவரவர் மகிழ்வணைமீதுருக்கியர்கள் வசமுழுகியவரடிமையென மாதரிட்டதொழில்தனிலுழ லுமசடனையுனடியே வழுத்தவருடருவாயே; சமரமொ டுமசுரர்படை களமீதெதிர்த்தபொழுதொரு நொடியில வர்கள்படை கெடவேலெடுத்தவனி தனினிருதர்சிரமு ருள் ரணதூள்படுத்திவிடு செறுமீதே; தவனமொடுலகை நடமிடவீரபத்திரர்களதிர நிணமொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய் தசையணவு தனின்மகிழும் விடுபேய்நி ரைத்திரள்கள் பலகோடி, திமிதமிடநரிகொடிகள் கழு காடரத்தவெறிவயிரவர்கள் சுழலவொரு தனியாயுதத் தைவிடு திமிரதினகரமமரர் பதிவாழ்வுபெற்றுலவு முரு கோனே, திருமருவுபுயனயனொ டயிராவதக்குரிசி லடிப ரவுபழநிமலை கதிர்காமமுற்றுவளர் சிவமசமயலறுமுகம திருவேரகத்திலுறை பெருமாளே

௰௬. தனனதளத்த தனனதனத்த
தனனதனத்த-தனதான.

மருவேசெறித்த குழலார்மயக்கின் மதனகமத்தின் விரகாலே; மயலேயெழுப்பியிதமாயருத்தி மலைநேர்முலை

க்கு ளூறவாகி; பெருகாதலுற்றதமியேனைநித்தல் பிரியா தபட்சமுடனேயென்; பிழையேபொறுத்து னிருதாளி லுற்ற பெறுவாழ்வுபெற்ற வருள்வாயே, குருவாயரக்கு முபதேசம்வைதத குகனேகுறத்தி மணவாளா, குளிர்கா ன்மிகுத்த வளர்போதமுற்றகுட காவிரிக்குவடபாலவாழ திருமாறனக்கு மருகாவுமைக்கோர் சிறுவாகரிக்கு-மிளை யோனே; திருவேரகத்திலுறைவாயரக்கர் சிரமேதுணித் த-பெருமாளே.

உ௰. தானனதத்தன தத்தனதத்தன
தானதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன—தனதான

கோமளவெற்பினையொத்ததனத்தியர்காமனையொப் பவர் சித்தமுறுக்கியர் கோவையிதழ்க்கனி நித்தமும் வி ற்பவர்-மயில்காடை - கோகிலநட்புற வொத்திடு புட்குர லாரணியப்புகழ் வகைக்குரல்கற்றியர்கோலவிழிக்கடை யிருட்டுமெருட்டியர் விரகாலே, தூயமலர்ப் பளிமெத்தை படுப்பவ ராரையுமெத்தி மனைக்குளழைப்பவர் சோலை வனக்கிளியொத்தமகிழ்ச்சியர் நெறிகூடா, தூசுநெகிழ் த்தரை சுற்றியுடுப்பவர் காசுபறிக்க மறித்து முயக்கியர் தோகைவித்தை படித்துநடிப்பவ - குறவாமோ, மாமர மொத்துமலைக்குணெருக்கிய சூரனைவெட்டி நிணக்கு டலைக்கொடு வார்புவிமெச்சவழித்தவிலட்சண - கதிர்க

ம;மாமலையிற்பழ நிப்பதியிற்றனி மாகிரியிற்றணி கைக்கிரியிற்பரிமாகிரியிற்கிரிசுற்றிவளைத்திடு-மனைவாயில்;ஏமவெயிற்பெறு வெற்பினிற்று-ஞலுலகத்துள பத்தர்கள்சித்தம தேதுநினைத்ததி மெத்தவளித்தரு - ளிளையோனே; யோகவெற்பெனு மற்புதமிக்கசுவாமிமலைப்பதி மெச்சியசற்சன ராசதலட்சண வுற்றமிபெற்றருள் பெருமாளே.

உக. தந்தன்தானதான தந்தனதானதான
தந்தனதானதான—தனதான

வஞ்சகலோபமூடர் தம்பொருளூர்கடேடி மஞ்சரிகோவைதூது-பலபாவின்,வண்புகழ்வாரிகாரியென்றிசைவாதுகூறி வந்தியர்போலவீணி-லழியாதே; செஞ்சரணுதகீத கிங்கிணிநீபமாலைதிண்டிறல்வேல்மயூரமுகமாறும், செந்தமிழ் நாளுமோதி யுய்ந்திட ஞானமூறு செங்கனிவாயிலோர்சொ-லருள்வாயே; பஞ்சவனீடுகூனு மொன்றிடுதாபமோடு பைந்தமிழ்வாதுகூறு சமண்மூகர்;பண்பறுபீலியோடு வெங்கழுவேறவோது பண்டிதஞானநீறு தருவோனே; குஞ்சரசாலைமேவு பைம்புனமீதுலாவுகுன்

றவர்சாதிகூடி-வெறியாடி;கும்பிடுநாடுவாழ்வு தந்தவரோ
டுவீறு குன்றுதொறுடன்மேவு பெருமாளே.

---

௨௨. தனனதன-தந்தனந்-தந்தனந்-தந்தனந்
தனனதன-தந்தனந்-தந்தனந்-தந்தனந்
தனனதன-தந்தனந்-தந்தனந்-தந்தனந்-தனதான

புணரியுமனங்கனம் புஞ்சுரும்புங்கரும் கயலினெடு
கெண்டையுங் கண்டனுங்கஞ்சமும் புதுநிலவறுந்தியுந்
துஞ்சுநஞ்சும்பொருப்-பெரிவேலும்;பொருவெனவிகன்ற
கன்றங்குமிங் கழன்றிடை கடைசிவந்து வஞ்சம்பொதிந்
திங்கிதம்புவியிளைஞர்முன் பயின்றம்பொனின் கம்பிதக்
குழைமோதி; குணலையொடுமிர்த்ரியஞ் சஞ்சலங்கண்டி
டும் படியமர்புரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்கொடுமை செ
ய்து சங்கொடுஞ்சிங்கிதங்குக்கடை கணிஞர்பால், குலவு
பலசெந்தனங் தந்துதந்தின்புறுந் த்ரிவிதகரணங்களுங்
கந்தநின்செம்பதங் குறுகும்வகையந்தியுஞ்சந்தியுந் தொ
ந்தமற் றமைவேனோ, துணர்விரிகடம்பமென் றொங்கலு
ம்பம்புறும் புழுகும்சவம்பசுஞ்சந்தளங்குங்குமந் தொகு
களபமுந்து தைந்தென்று நன்கொன்றுபத்-திருதோளும்

தொலைவில்சண்முகங்களுந் தந்த்ரமந்த்ரமங்களும்பழனி மலையும்பரங்குன்றமுஞ்செந்திலுந் துதிசெயுமெயன்பர்தஞ் சிந்தைசென்றன்புறப்-பதிவாழ்வாய்,கணபணபுயங்கமுங் கங்கையுந்திங்களுங்குரவுமறுகுங்குறுந்தும்பையுங் கொன்றையுங் கமழ்சடலசம்புவுங்கும்பிடும் பண்புடைக் குருநாதர்; கனகுடகில்நின்றகுன்றந்தருஞ் சங்கரன்குறுமுனிகமண்டலங்கொண்டுமுன் கண்டிடும்கதிசெய்நதிவந் துறுந்தென்கடம்பன்றுறைப் பெருமாளே.

திருசிராமலை.

—*—

உ௬. தனனதானன தானனதானன
தனனதானன தானனதானன
தனனதானன தானனதானன-தனதான.

தறையின்மானிடராசையினுன்மட லெழுதுவாரருண்மாதர்கள் தோதகசரசமாய்மலரோதியி னுலிருகொங்கையாலும்சதிசெய்நூலிடையாலுடை யானடையழகினுன்மொழியால்விழியான்மருள் சவலைநாயடியேன்மிகவாடியங்கலாமோ;பறவியானுமெய் ஞானிகண்மோனிக ளணுகொணுவகைநீயி னிராசியபவன பூரகரேசகமாகிய-விங்

துநாதம்; பகரொணாததுசேரவொணாததுநினையொணாத
துவானதயாபர பதியதானசமாதிமனோலம்-வந்துதாராய்
சிறைவிடாத நிசாசரர்சேனைகண்மடியநீலகலாபமதேறிய
திறல்வினோத சமேளதயாபர-வம்புராசி;திரைகள்போல
லை மோதியசீதளகுடககாவிரி நீளலைசூடிய திரிசிராமலை
மேலுறைவீரகு-றிஞ்சிவாழும்;மறவர்நாயகவாதிவிநாயக
காவிரிநாயகவடிவினாயக வானைதனாயகவெங்கள் மானின்
மகிழுநாயகதேவர்கணாயக கவுரிநாயக னார்குருநாயகவடி
வதாமலை யாவையுமேவிய-தம்பிரானே.

திருப்போரூர்.

உச. தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த-தனதான.

உருக்கார்வாளிகண்கள் பொருப்பார்வார்தனங்களு
ரைத்தேன்வாலசந்த்ர-நுதனாலா; முறுக்கேர்நீண்மருங்
குல் பணைத்தோளோதிகொண்ட லுவப்பாமேல்விழுந்து
திரிவோர்கள்;அறுக்காமாதர்தங்கள் கலைக்கேயோடுமீன்
க வலைக்கேபூணுநெஞ்ச-னதிபாவி; யசட்டால்முடுகின்ற

மசக்காலமாயுமிந்தவவத்தாலீனனெற்கென்-றருள்வாயே
எருக்கார்தாளிதும்பை மறுச்சேர்போதுகங்கையினைச்சூ
டாதிநம்பர்-புதல்வோனே; யிருக்காலேநினைந்து துதிப்
பார்நாவினெஞ்சி லிருப்பாயானைதங்கு-மணிமார்பா; செ
றுக்காலேமிகுந்த கடற்சூர்மாளவென்ற திறற்சேர்வேல்
கைகொண்ட முருகோனே; தினைக்கோர்காவல்கொண்ட
குறத்தேன் மாதுபங்க திருப்போரூரமர்ந்த-பெருமாளே

உ௫. தானதானன-தானன
தானதானன-தானன
தானதானன-தானன-தனதான

சீருலாவியவோதிமமான மாநடைமாமயில் சேயசா
யல்கலாமதி-முகமானார்;தேனுலாவிய மாமொழிமேருமா
மலைமாமுலை சேலுலாவியகூர்விழி-குமிஞசி; தாறுலாவி
யநீள்குழல் வேயளாவியதோளியர் சார்பிலேதிரிவேனை
நின்-னருளாலே; சாமவேதியர் வானவரோதி நாண்மலர்
தூவிய தாளில்வீழவிணுமிக-வருள்வாயே; காருலாவியநீ
ள்புனவேடர்மால்வரை மீதுறைகாவல் மாதினொடாவல்
செய்-தருள்வோனே; காணவாகம வேதபுராணநூலினி

ஞேதிய காரணகருணாகர-முருகோனே; போருலாவிய சூரனேவாரிசேறெழவேல்விடுபூசைசேவகமாமயின்மிசை யோனே; போதன்மாதவன் மாதுமைபாதி யாதிதொழா வரு போரிமானகர்மேவிய பெருமாளே.

திருச்செங்கோடு.

உசு. தந்தாதனந்-தந்தாதனந்த
தந்தாதனந்த-தனதான

பந்தாடியங்கநொந்தார் பரிந்துபைந்தார்புனைந்தகுழன்மீதே; பண்பார்சுரும்பு பண்பாடுகின்ற பங்கேருகங்கொண்-முகமீதே; மந்தாரமன்றல் சந்தாரமொன்றிவன்பாதகஞ்செய்-தனைமீதே;மண்டாசைகொண்டு விண்டாவிநொந்து மங்காமலுன்ற-னடிதாராய்; கந்தாவரன்றன்மைந்தாவிளங்குகன்றுமுகுந்தன்-முருகோனே;கண்டோர்புகழ்ந்த நன்கார்மடந்தை கந்தாவரம்பை-மணவாளா; செந்தாரடைந்த கொந்தார்கடம்ப திண்டோணிரம்ப வணிவோனே; திண்கோடடர்ந்த வெண்கோடுறங்கு செங்கோடமர்ந்த பெருமாளே.

பழமுதிர்சோலை.

உஎ. தனதன-தானதான-தனன-தானதான
தனதன-தானதான—தனதான

இலவிதழ்கோதிநீலி மதலையராரபார விளங்கையா டவாட-மிகவாதுற், றெதிர்பொருகோரபார மருமகமத கோலகால விணைமுலை மார்பிலேற - மதராசன், கலவிய லோடிநீடு வெகுவித ராசபோக கரணப்ரதாடலீலை மட மாதர், கல்வியின்முழ்கியாழ மிழிதொழிலேனுன் மீதில் கருதியஞானபோத-மடைவேனோ; கொலைபுரி காளிசூலி வயிரவிநீலிமோடி குலிசகுடாரியாயி-மகமாயி;குமரிவரா கிமோகி பகவதியாதிசோதிகுணவதியாலமூணி-யபிராமி பலிகொள்கபாலியோகி பரமகல்யாணிலோக பதிவிர்தை வேதஞானி-புதல்வோனே, படையொடுசூரன்மாள முடி கியசூரதீரபழமுதிர்சோலைமேவு-பெருமாளே.

சோலைமலை

உஅ. தானதன-தந்ததந்த
தானதன-தந்ததந்த—தனதான

வாரணமுகங்கிழுந்து வீழவுமலறும்பலர்ந்து மால் வரை யசைந்தனங்கன - முடிசாய, வாளகிரி யண்டரண்

டகோளமுறநின்றெழுந்து மாதவமறந்திறந்துங்லைபேற; பூரணகுடங்கடிந்து சீதகளபம் புனைந்துபூசலை விரும்பு கொங்கை-மடவார்தம்; போசயனந்தவிர்ந்து நாடகபதம் பணிந்து பூசனைசெய் தொண்டனென்ப தொருநாளே; ஆரணமுழங்குகின்றவாயிரமடந்தவங்களாகுதியிடங்கள் பொங்கு-நிறைவீதி யாயிரமுகங்கமழ்ந்து நூபுரமிரங்கு கங்கை யாறமரவந்தலம்பு துறைசேரத் தோரணமலங்கு துங்க கோபுரநெருங்குகின்ற சூழ்மணிபொன்மண்டபங் கள்-ரவிபோலச், சோதியின்மிகுந்த செம்பொன் மாளிகைவிளங்குகின்ற சோலைமலைவந்துகந்த-பெருமாளே.

சீபுருடமங்கை.

உகூ. தானதனதந்த-தானதனதந்த
தானதனதந்த—தனதான

வேனின்மதனைந்துபாணம்விடநொந்து வீதிதொறு நின்று மடவார்பால்; வேளையெனவந்து தானில்விழுந்து வேடைகெடநண்பு-பலதேசி; தேனினுமணந்தவாயமுத முண்டு சீதளதனங்க-ளினின்முழ்கி, தேடியதனங்கள்

பாழ்படமுயன்று சேர்கதியதின்றி-யழல்வேனோ, ஆனிரைதுரந்து மானிலமளந்தோ ராலிலையிலன்று-துயின்மாய, னுயர்மனைசென்றுபா ரயிரளந்த வாரணமுகுந்தன்-மருகோனே, வானவர்புகழ்ந்து தானவர்பயங்கொள் மானெடுவிளங்கு மணிமார்பா, மாமரைமுழங்கு, சீபுருடமங்கைமாநகரமர்ந்த பெருமாளே.

ப ழ நி.

௩௰ தனனதந்தன-தந்தனதன
தனனதந்தன-தந்தனதன
தனனதந்தன-தந்தனதன-தந்ததான

கனககும்ப மிரண்டுநேர்மலை யெனநெருங்கு குரும்பைமாமணி கதிர்சிறந்து வடங்குலாவிய மர்ந்தகுதுங், கடையினின்று பறந்துநாடொறு மிளகிவிஞ்சி யெழுந்தகோமள களபகுங்கும கொங்கையானையை யின்பமாகி; அனைவருங்கொளு மென்றுமேல்விலை யிடுமடந்தையர்தங்கடோதகம் தினமருண்டு துவண்டெனசையுமுந்துபாய,வதிவிதங்கொளு மின்பசாகர முழுகும்வஞ்சகநெஞ்சையேயொழிதருபதங்கதியெம்பிரானரு டங்

திடாயோ; தனனதந்தன தந்தனதன டிகுகுடிங்குகு டிங்குபேரிகை திகுகுதிங்குகு திந்ததோவெனவொன்றுதாளந், தமரசஞ்சல சஞ்சலாவென முழவுடுண்டுடு டுண்டுடுவென தருணங்கிங்கிணிகிண்கிணாரமுழங்கவோதி,பணிதபதங்கய வெண்டிசாமுக கிரியடங்கலுமண் கோளகை பற்றிநின் றிடவந்தவாடகமொன்றுதோகை,பவுரிகொண்டிட மிண்டியேவரு நிசிசரன்கிளை கொன்றவேல்கொடு பழனியங்கிரி யின்கண்மேவிய தம்பிரானே.

திருவேங்கடம்.

௩௧. தனதாந்தன-தானன-தானன
தனதாந்தன-தானன-தானன
தனதாந்தன-தானன-தானன-தனதான

வரிசேர்ந்திடு சேல்கணையோவெனு மிருள் போன்றிடு வேலையுநீலமும் வடுவாங்கிடு வேல்விழி மாதர்கள்-வலையாலே, வளர்கோங்கிள மாமுகையா பயதனவாஞ்சையி லேமுகமாயையில் வளர்மாந்தளிர் போனிறமாகிய-வடிவாலே, இருள்போன்றிடு கார்குழ னீழலி

ணிழைசேர்ந்திடு பாயலின்மீதுற வினிதாங்கனி வாயமு
தூறல்கல் பருகாமு, னமதாந்தன மானவைபோனபி
னவர்வேண்டுவ தாகிலமேயினி யிவைநீங்கிட வேயிரு
தாளினை யருள்வாயே, கரிவாம்பரி தேர்திரள் சேனையு
முடனார்துரி யோதனனாகிய ரவர்மாண்டிட வேயொரு
பாரத மதிலேகிக், களபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதியாகிய கதிரோங்கிய நேமியனாமரி
ரகுராமன், திரைநீண்டிரை வாரியும்வாலியு நெடுவான்
பயின் மாமரமேழொடு தசமாஞ்சிர ராவண னார்முடி
பொடியாக, சிலைவாங்கிய நாரணனார்மரு மகனாங்குக
னேபொழில்சூழ்தரு திருவேங்கட மாமலை மேவிய பெ
ருமாளே.

௫௨. தானதத்தன தத்தனதத்தன
தானதத்தன தத்தனதத்தன
தானதத்தன தத்தனதத்தன—தனதான

ஆலம்வைத்த விழிச்சிகள்சித்தச னாகமங்கலை கற்ற
சமர்த்திக ளார்மனத்தையு மெத்திவளைப்பவர் தெருவூ
டே, யாரவட்ட முலைக்குவிலைப்பண மாயிரக்கல மொட்
டியளக்கினு மாசையைப்பொரு ளொக்க நடிப்பவ ருட
ன்மாலாய், மேவிளைப்பு முசிப்புமவத்தையு மாயெடுத்த

குலைப்பொடு பித்தமு மேல்கொளத்தலை யிட்டவிதிப்படி யெனுமாறும், வேள்கணைக்கிரை யிட்டுடலெத்தனை பாடுபட்ட புழுக்கமலக்குகை வீடுகட்டி யிருக்குமெனக்குநி னருள்தாராய், பீலிமிக்க மயிற்றுரகத்தினில் ஏறிமுட்டி வளைத்து வயிற்றுடல் பீறிலக்கறும் யுத்த களத்தினில் மடியாத, பேரரக்க ரெதிர்த்தவ ரெத்தனை பேரையுக்ர களப்பலியிட்டுடல் பேய்கைகொட்டி நடித்து மணிக்கழு குடனுட, ஏலம்வைத்த புயத்திலணைத்தொரு வேலெடுத்த சமர்த்தையுரைப்பவர் யாவருக்கு மனத்தி னினைப்பவை யருள்வோனே, யேழிசைத்தமி ழிற்பயனுற்றவெளுவலுற்றடி யிற்பயிலுத்தம னீசன்முக்கணு குத்ரனளித்தருள் பெருமாளே.

கற்குடி.

௩௫. தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத்—தனதான.

குடத்தைத்தகர்த்துக் களிற்றைத்துரத்திக் குவட்டைச்செருத்துக் ககசாலக், குலத்தைக்குமைத்துப் பகட்டிச்செருக்கிக் குருத்தத் துவத்துற் றடர்சோரப்,

புடைத்துப்பணைத்துப் பெருக்கக்கதித்துப் புறப்பட்டக ச்சுத் தனமாதர், புணர்ச்சிச்சமுத்ரத் திளைப்பற்றிருகப் புரித்துப்பதைத்தைத் தருவாயே, கடத்துப்புனத்துக்கு றத்திக்குமெத்தக் கருத்திச்சையுற்றுப் பரிவாகக், கனக் கப்பிர்யப்பட் டகப்பட்டுமைக்கட் கடைப்பட்டு நிற்கை க் குரியோனே, தடத்துற் பவித்துச் சுவர்க்கத் தலத்தை ச் சமைப்பித்தகொற்றத் தனிவேலா, தமிழ்க்குக்கவிக்கு ப் புகழ்ச்செய்ப் பதிக்குத் தருக்கற்குடிக்குட் பெருமா ளே.

திருமயிலை.

௩௪. தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதானன
தனனதானன தந்தனதந்தன—தனதான.

அளகபார மலைந்துசரிந்திட வதனவேர்வு துலங்கி நலங்கமழ் வதிகமோகம் விளைந்துகலந்துறை குயில்கா டை, யளிபுறுமயி லென்றுசொலுங்குரல் மிடறதாதுதி பங்கவிதஞ்செவி மகளிர்தோதக வப்பினினின்றுள மறு காதே, உளம்விடாது புகழ்ந்து பணிந்திட வறிவிலாதம னங்கொடு நின்றினி யுலையுறும லுவந்தெனை நண்பொடு

சிவயோகத், துருகுஞான பரம்பரமந்திர மனுகொணுத பதந்தருசிந்துர வுபயசிதள பங்கயநின்கழ லருள்வாயே, இளகிடாவகை சந்தனகுங்கும களபபூரண சொங்கைந லம்புனே யிரதிவேள்பணி தந்தையுகந்தரு ளிணையோனே, யினியதாயெதி ரிந்திரர்ண்டரு மரகராசிவ சங்கர சங்கர வெனமிகாவரு நஞ்சினையுண்டவ ரருள்பாலா, வளர்நிராசரர் தங்கள்சிரம்பொடி படவிரோத மிடுங்குல சம்ரம மர்கவாரி கடைந்தநெடும்புயல் மருகோனே, மதுரவாக மிஞ்சியகிஞ்சுக விதழிமாதுமை மைந்த விரும்பொழில் மயிலைமீதினில் வந்துறையிந்திரர் பெருமாளே.

திருவருணை.

௩௫. தனனதனனத் தனனதனனத்
தனனதனனத்—தனதான.

அருமாமதனைப் பொருள்வா ருகயல்குத் தயிலார் நயனக் கொடியார்த, மழகார் தனநற் புழுகார் சயிலத்தணையா வலிகெட் டுடல்தாழ, இருமா னடைபுக் குரைபோயுணர்வற் றிளையா வுவமுட் குயிர்சோர, எரிவாய்

நரகிற் புகுதாதபடிக் கிருபாதமெனக் கருள்வாயே, ஒரு மால்வரைபட் டிருகூறிருகூ றிடவுற்றொருவே றனைவிட் டெறிவோனே, வுறமானமறலக் குறமாமகலக் குருகாவி ருபொற் புயவீரா, திருமால்கமலப் பிரமாவிழியிற் றெரி யாவரனுக் கரியோனே, செழுநீர் வயல்சூற் றருணபுரியி ற்றிருவீதியினிற் பெருமாளே.

பொது.

௩௪. தனனதான தானன தனனதான தானன
தனனதான தானன—தனதான.

அதலசேடனாராட வகிலமேருமீதாட வபினகாளி தானட வவயோடன், றதிரவீசி வாதாடும் விடையினே றுவாராட வகிலபூத வேதாள மவையாட, மதுரவாணி தானட மலரில்வேதனாராட மருவிவானு ளோராட மதி யாட, வனசமாமி தானட நெடியமாம னாராட மயிலுமா ட நீயாடி வரவேணும், கதைவிடாத தோள்வீம னெதி ரியான போர்மீளி கருதொணாத மாசேனை பொடியாகக், கதறுகாலி போய்மீள விசையனேறு தேர்மீது கதிர்கொ ள்வீறுகோடேதி யலேமோது, முததிமீதிலேசாயு முலகமூ டுசேர்பாத வுவணவூர்தி மாமாயன் மருகோனே, யுதயதா

மமார்பான ப்ரபுடதேவமாராஜ னுளமுமாடவாழ்தேவர் பெருமாளே.

யாழ்ப்பாணம்.

௩௭. தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன—தனதான.

பூத்தார்சூடுங் கொத்தலர் குழலியர் பார்த்தால்வே லுங் கட்கமுமதன்விடு போர்க்கார்நீடுங் கட்சரமொடு நமன் விடுதூதும், போற்றா நாளுங் கைப்பொரு ளுடையவர் மேற்றூளார்தம் பற்றிடுப்ரமையது பூட்டாமாயங் கற்றமை விழியின ரமுதூறல், வாய்த்தார்பேதகு செப்புமெய்விரகியர் நோற்றேநூலின் சிற்றிடையிடைபட வாட்டாய்வீசுங் கர்ப்புரமிர்கமத மகிலாரு, மாப்பூணாரங்க ச்சணிமுலேயினர் வெட்பூணுகங் கெட்டன னுனதுமெய் வாக்கால்ஞானம் பெற்றினிவழிபட வருளாயோ, ஆத்தாள்மால்தங் கச்சிகனிகையுமை கூத்தாடானந்தச்சிவை திரிபுரை யாட்பேய்பூதகு சுற்றியபயிரவி திரிலோக, மாக்காயாவும் பற்றிய பரிபுரை நோக்காடேதுஞ் செற்றண் டிருவிளையாட்டாலீசன் பக்கமதுறைபவள் பெறுசேயே,

ஏத்தாநாளுந் தர்ப்பணசபமொடு நீற்றூர்ஞானம் பற்றிய குருபர பார்ப்பாராயுஞ் சொற்றமிழருடரு முருகோனே யேற்போர்தாம்வந் திச்சையின்மகிழ்வொடு வாய்ப்பாய் பேசும் பொற்ப்ரபை நெடுமதில் யாழ்ப்பாணயன் பட்டினமருவிய பெருமாளே.

பொது.

௩அ. தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானானதன-தந்ததான.

உறவின்முறை கதறியழ வூராறு மாசையறு பறை திமிலை முழவினிசை யாகாசமீதுமுற வுலகிலுள பலரரிசிவாய்மீதி லேசொரியு மந்தநாளி, லுனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழியு முபயபத மிசைகுலவு சீரேறுநூபுரமு மந்தமார்பு, மறையறையுமமரர்தரு பூமாரி யேசொரியு மதுவொழுகு தாளமணி மீதேழுநாலுமொரு மயிலின்மிசை யழகுபொலி தாளாவுன்னடியர் வந்துசூடி, மறிபடை யமபுரமு மீதோட வேபொருது விருதுபல

முறைமுறையி லேயூதிவாதுசெய்து மதலையொரு குதலை யடி நாயேனை யாளவிமன் வந்திடாயோ, பிறையெயிறு முரணசுரர் பேராதுபாரில்விழ வதிரவெழு புவியுலகமீ தேழுமோலமிடு பிடிகளிறு வரிநிறைகள் பாழாகவேதி சைநின்ற நாகம்பெரிய நெடுமலையிடிய மாவாரி தூளியெ ழு பெரியதொரு வயிறுடைய மாகாளிகூளியொடு பிணை நிணமு முணவுசெய்து பேயோடுமாடல்செய வென்றதீ ரா, குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடு கர டிபுலி சிளிகடிய வாராதகாதன்மிகு குளிர்கணியி னிள மதம தேயாகி நீடியுயர் குன்றுலாவி, கொடியதொரு மு யலகனின் மீதாடுவாருடைய வொருபுறம துறவளருமா தா பெறுவருள்செய் குமரகுரு பரவமரர் வாழுடர்பே ணவருள் தம்பிரானே.

திருப்பழனிமலை.

௩௯. தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்—தனதான

கடலைச்சிறைவைத்து மலர்ப்பொழிலிறப்ர மரத்தையுடற்பொறியிட்டு மடுக்கமலத்தைமலர்த்தி விடத்தைரியப் பவனூணுக், கருதிச்சருவிக் கயலைக்கயமுட்படுவித்துழையைக்கவளத் தடைசிககணையைக் கடைவித்துவடுத்தணையுட் பினின்மேவி; அடலைச்செயல்சத்தியையக்கினியிற் புகுவித்துயமபயிரப்புவைத்து கைவித்தரிகட்கமடுத்துவிதிர்த்துமதித் தசகோர, மலரப்பணிரத்னமணிக்குழையைச் சிலுகிட்டுமையிட்டொளிர் விட்டுமருட்டிறமுற்ற பொறிச்சியர்கட்கடையிற் படுவேனோ; சடிலத்தவனிட்டவிசிட்டகுலத்தொரு செட்டியிடத்தினுதித்தருள்வித்தக வதராஜனப்பெயர்செப்பியிடப் பரிவாலே, சனகற்குமகஸ்தியபுலஸ்தியசனற்குமாரற்குமனுக்ரகமெய்ப்பலகைச்சதுபத்து நவப்புலவர்க்குநிவர்த்தியின் ஞானபடலத்துறிலக்கணவிலக்கியசொற்றமிழியிற்பரியமுற்றிலகப்பொருளைப் பழுதற்றுணர்வித்தகசற் குருநாதா, பவளக்கொடிசுற்றிய பொற்கமுகிற்றலையிற் குலைமுத்துதிர்செய்க் கமுகிற்றலையிற்குலைமுத்துதிர்செயக் கழனிப்பழநிப் பதிவெற் பினினிற்குமியற் பெருமாளே.

௪௰. தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன-தனதான

முத்துக்குச்சிட்டிக்குப்பி முடித்துச்சுக்கைப்பிறசுற்றியுமுற்பக்கத்திற்பொற்றிட நுதன்மீதே, முக்யப்பச்சைப்பொட்டணிரத்னச்சுட்டிப் பொற்பட்டிவைமுச்சட்டைச் சித்திரக்கடடழ கெழிலாடக், தித்திக்கச்சொற்சொற்றுப்பிதழ் நச்சுக்கட்கற்புச்சொக்கியர்செப்புக்கொக்கக்கச்சுப்பெறு தனமேறு, திட்டத்தைப்பற்றிப்பற்பலலச்சைக்குட் பட்டுத்தொட்டுயிர் சிக்கிச்சொக்கிக்கெட்டிப்படி யழல்வேனோ, மெத்தத்துக்கத்தைத்தித்தியினிச்சித்தத்திற்பத்தத்தொடு மெத்தசொர்க்கத்திற்சிற்பர மருள்வாயே; வித்தைக்குக் காத்துத்தற்பரமுக்கட்சித்தகுப்புத்திரவிச்சித்ரச் செச்சைக்கத்திகை புனைவோனே, நித்யக்கற்பத்திற்சித்தர்க ளெட்டுத்திக்குட்பட்டவர் நிட்டைக்கற்பத்துப்புத்தர்களமரோரும், நெட்டுக்குப்புட்பத்தைக்கொடு முற்றத்துற்றர்ச்சிக்கப் பழநிக்குப்பட்டத்துக்குத்துரை பெருமாளே

௪௧. தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன-தனதான,

கடலைபொரியவரைபரிகனிகழைநுகர் கடினகுடவு
தர விபரீத, கரடதடமுமதநளினசிறு நயனகருணிமுக
வரது துணைவோனே, வடவரையின்முகடு வதிரவொரு
நொடியில் வலம்வருமரகத மயில்வீரா; மகபதிதருசுதை
குறமிஞெடிருவருமருவுசரசவித மணவாளா, அடலசுர
ர்கள்குலமுழுதுமடியவுயரமரர்சிறையைவிட வெழில்மீ
று, மருணகிரணவொளி யொளிருமயிலைவிடு மரகரசரவ
ண பவலோலா, படலவுடுபதியை யிதழியணிசடில பசு
பதிவரநதி யழகானை; பழனிமலையருள்செய் மழலைமொ
ழிமதலைபழனிமலையில்வரு பெருமாளே.

௪௨. தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்-தனதான.

புடவிக்கணிதுகிலெனவளர்ந்தக் கடலெட்டையும
ற்குடிமுனியின்கட் புனிதச்சத்தள நிலைகொள் சயம்புச்
சதுர்வேதன் புரமட்டெரியெழ விழிகனல்சிந்திக் கடின

த்தொடுசில சிறுநகைகொண் டற்புதகாத்தரகரபரசிவ
ளிந்தத் தனிமூவ; ரிடசித்தமுநிறை தெளிவுறவும்பொ
ற் செவியுட்பிரணவரகசியமனபுற்றிடவுற்பனமொழி யு
ரைசெய்குழந்தைக் குருநாதா, வெதிருற்றசுரர்கள் சடை
கொடு சண்டைக்கிடம்வைத்திடவவர்குல முழுதும்பட்
டிடவுக்கிரமொடுவெகுளிகள் பொங்கக்கிரியாவும்பொடி
படுதிரவும்விரிவுறுமண்டச் சுவர்விடளதிரவுமுகடுகிழி
ந்தப்புறமப்பரவெளி திடுதிடெனுஞ்சத் தமுமாக; பொ
ருதிக்கையிலுளவயினிணமுண்கக்குருதிப்புனலெழுகட
லினு மிஞ்சப்புரவிக்கனமயினடமிடும்விந்தைக் குமரே
சா, படியிற்பெருமைக டகவுயர்செம்பொற்கிரியைத் த
னிவலம்வரவரனந்தப் பலனைக்கரிமுகன்வசமருளும்பொ
ற் பதினாலே, பரன்வெட்கிடவுடமிகவும் வெகுண்டக்க
னியைத்தரவிலையெனவருசெந்திப் பழனிச்சிவகிரிதனி
லுறைகந்தப்பெருமாளே.

௪௫. தனதன தந்தத்தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன-தனதான.

மலரளிகொண்டைச் சொருக்கிலே யவள்சொலு
மொழியின்பச் செருக்கிலேசொடுமையுமடர் நெஞ்சத்தி
ருக்கிலேமுக மதியாலே, மருவுநிதப்பத்தடத்திலேநிறை
பரிமளகொங்கைக்குடத்திலேமிக வலியவும்வந்தொத்தி
டத்திலேவிழி வலையாலே, நிலவெறியங்கக் குலுக்கிலே
யெழில் வளைபுனைசெங்கைக் கிலுக்கிலேகள நிதிபறியந்
தப்பிலுக்கிலேசெய மொயிலாலே, நிதமியலுந்துற்குண
த்திலேபர வசமுடனன்பும் றிணக்கிலேயொரு நிமிஷபி
ணங்கிக்கணத்திலேவெகு மிதிகேடாய், அலையநினைந்து
ற்பனத்திலேயனுதினமிகுமென் சொப்பனத்திலேவர வ
றிவுமழிந்தற்பனத்திலேநித முலைவேனோ, வசடனைவஞ்
சச் சமர்த்தனாகிய கசடனையுன்சிறகடைக்கணாடியு மலர்
கொடுநின்பொற்பதத்தையேதொழ வருடாராய், பலபல
பைம்பொற் பதக்கமாரமு மடிமைசொலுஞ்சொலுஞ்
சொற் றமிழ்ப்புனீரொடு பரிமளமிஞ்சக்கடப்பமாலையும
ணிவோனே, பதியினின்மங்கைக் கதித்தமாமலையொடு
சிலகுன்றிற்றரித்து வாழ்வுயர்பழநிமிலன்புற் றிருக்கும்
வானவர் பெருமாளே.

திருச்செந்தில்.

சச. தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன-தனதான.

வஞ்சங்கொண்டுந் திடராவணனும் பந்தெனதிண்ப
ரிதேர்கரிமஞ்சுன்பண்புஞ்சரியாமென வெகுசேனை, வங்
தம்பும்பொங்கினதாக வெதிர்ந்துந்தன் சம்பிரதாயமும்
வம்புந்தும்பும்பல பேசியுமெதிரேகை; மிஞ்சென்றுஞ்ச
ண்டைசெய்போது குரங்குந்துஞ்சுங்கனல்போல வெகு
ண்டுங்குன்றுங்கலைமாரியு மதில்வீசி, மிண்டுந்துங்கங்க
ளிஞலெதகாந்தங்கங்கரமார் பொடுமின்சந்துஞ் சிந்திரி
சாசரர் வகைசேர, வஞ்சண்டன் றென்றிசைநாடிவிழுந்
தங்குஞ்சென்றெமதூதர்க ளுந்துந்தென்றிடவேதசை நி
ணமூளை, யுண்டுங்கண்டுஞ்சில கூளிகள்டிண்டிண்டென்
றுங்குதிபோட வுயர்ந்தம்புங்கொண்டு வெல்மாதவன் ம
ருகோனே, தஞ்சந்தஞ்சஞ்சிறி யேன்மதிகொஞ்சங்கொ
ஞ்சதுரையேயருள் தந்தந்தென்றின்பந்தருவீடது தரு
வாயே, சங்கங்கஞ்சங்கங்கயல்சூழ் கடமெங்கெங்கும்

பொங்கமகா புனிதந்தங்குன்ற் செந்தியில்வாழ்வுயர் பெருமாளே.

—*—

பொது.

சடு. தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன-தன தான.

நெடியவட குவடிடியவு மெழுகிரி நெறநெறெனநெரியவுமுதுபணபதிநிபிடமுடிகிழியவு நிலமதிரவும் விளையாடும் நிகரில்கலபியும்மரவுமிழ்துவசமும் நினதுகருணையுமறைதருபெருமையும் நிறமுமிளமையும் வளமையுமிருகரணமுநீபமுடியுமபிநயவனசரர்கொடியிடை தளரவளர்வனமிர்கமதபரிமள முகுளபுளகிதத்னகிரிதழுவிய திரடோளும்; மொகமொகெனமது கரமுரல்குரவணிமுருகனறுமுக னெனவருவுறுபெயர் முழுதுமியல்கொடு பழுதகமொழிமது மொருநாளே; கொடியயடுகொலைநிசிசரருரமொடு குமுதமெனவிசையுட னிசைபெறமிகு குருநதிவிதசதியொடு குதிகொள விதியோடக் குமிறுகடல்குடல்கிழிபடவடுமர மொளமொளெனவடியொடலறிவிழவுயிர்குருகுவபரிய வெவ்வரைதொளைபடவிடு சுடர்வே

லா, இடையில்முனைமலிகுலிச முமிலகிடகவளதவளகட தட கனகடவிபமுமிரணியதரணியு முடையதொர் தனியானைக், கிறைவகுருபரசரவணவெகுமுகக் கனபுனிதையுமவனிதைய ரறுவருமெமது மகவெனவுமைதருமிமையவர் பெருமாளே.

திருத்தணிகை.

சசு. தனன தந்த தத்ததனன தந்தத்தத்
தனன தந்த தந்த—தனதான.

எனையடைந்தகுட்ட வினைமிகுந்தபித்த மெரிவழங்குவெப்பு வலிபேசா, திகலிநின்றலைக்கு முயலகன் குலைப்பொடிருமனின்றிரைக்கு மிவையெலா, மனைகள்பெண்டிர்மக்கள் தமைமறந்து சுற்றமதிமயங்கிவிட்டு மடியாதே, மருவிவந்தெனக்கு மரகதஞ்சிறக்கு மயிலில்வந்துமுத்தி தரவேணும், நினைவணங்குபத்த ரனைவருந்தழைக்க நினைவில்வந்துதித்த கதிர்வேலா, நிலைபெறுந் திருத்தணியில் விளங்குசித்தர் நெடியகுன்றினிற்கு முருகோனே, தினைவணங்கலுற்ற புனவிளங்குறத்தி செயலறிந்தணைத்த மணிமார்பா, திசையுமுகனை றிகைக்கவசுரரன்றடைத்தசிறை திறந்துவிட்ட பெருமாளே.

திருச்செந்தில்.

௪௭. தந்தனா தந்தனத் தந்தனா தந்தனத்
தந்தனா தந்தனத்—தனதான.

பங்கமேவும்பிறப் பந்தகாரந்தனிற் பந்தபாசந்தனிற் றடுமாறிப்; பஞ்சபாணம்படப் புண்படாவஞ்சகப் பண்பிலாடம்பரப் பொதுமாதர்; தங்களாலிங்கனக்கொங்கையாகம்படச் சங்கைமால்கொண்டிளைத் தயராதே, தண்டைசூழ்கிங்கிணிப் புண்டரீகந்தனைத் தந்துநீயன்புவைத் தருள்வாயே, அங்கைவேல் கொண்டரக் கனப்ரதாபங்கெடுத் தண்டவேதண்டமுட் படவேதா, னஞ்சவேதிண்டிறற் கொண்டலாகண்டலற்கண்டலோகங்கொடுத் தருள்வோனே, திங்களார்கொன்றமைத் தந்துழாய் துன்றுபொற் செஞ்சடாசங்கரற் குறுதோகை, சிந்தையேதென்றிசைத் தென்றல்வீசும்பொழிற் செந்திவாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

குமரகோட்டம்.

௪௮. தனனதாத் தத்ததந்த
தனனதாத் தத்ததந்த
தனனதாத் தத்ததந்த—தனதான.

அறிவிலாப்பித்தருன்ற னடிகொழாக்கெட்டவஞ்ச ரசடர்பேய்க்கத்தர்நன்றி யறியாத, வவலர்மேற்சொற்க ள்கொண்டு கவிகளாக்கிப்புகழ்ந்து வவரைவாழ்த்தித்தி ரிந்து பொருள்தேடிச், சிறிதுகூட்டிக்கொணர்ந்து தெ ருவுலாத்தித்திதந்து தெ வைமார்க்குச்சொரிந்து வவ மேயான், பிரியுமார்க்கத்துசிந்தை யதனைமாற்றிச்சிறந்த தெளிவுமோட்சத்தையென்று பெறுவேனே; இறையு மாற்றுற்றசெம்பொ னிடமும்வேற்றுப்பிரிந்து வருளின் மேற்கச்சிவந்த வுமையாடன், னிருளைநீக்கித்தவஞ்செய் தருளைநோக்கிக்குழந்தை விறைவர்கேட்கத்தவஞ்சொ-லுடையோனே; குறவர்கூட்டத்திலன்று கிழவனய்புக்கு நின்று குருவியோடித்திரிந்த குறமானைக், குணமதாக்கி ச்சிறந்த வழகுகாட்டிப்புணர்ந்த குமரகோட்டத்தமர்ந் த பெருமாளே.

சோலைமலை.

சகூ. தனனதந்தத் தத்தான தனனதந்த தத்தான
தனனதந்தத் தத்தாள—தனதான.

களவுகொண்டுகைக்காசி னளவறிந்துகற்பூர களப தங்கவித்தார முலைமீதே, கல்வியின்பம்விற்பார்க்க ளவ

யவங்களைப்பாடுங் கவிதெரிந்துகற்பார்கள் சிலர்தாமின்; றுளநெகிழ்ந்தவத்தான வுரைபிறழ்ந்துசத்தான வுனையுணர்ந்துரித்தான மணநாறு; முபயபங்கயத்தாளி லபயமென்றுனைப்பாடு முறைதெரிந்துகற்றேறு திவிழிலாமோ, அடவில்வன்கவிச்சேனை பரவநின்றசுக்ரீப வரசுடன்கடற்றூளி யெழவேபோ; யடவிலங்கைசுட்டாட நிசிசரன்சுக்ரீவ னறவொரம்புதொட்டார்தம் மருகோனே; வளருமந்தரச்சோலை மலையுகந்தமுற்பால வளவர்கொம்பினைத்தேடி யொருவேட, வடிவுகொண்டுபித்தாகி யுருகிவெந்தழற்கானில் மறவர்குன்றினிற்போன பெருமாளே.

ருல. தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன—தனதான.

எத்தியிருகுழையை மோதிமீளமதிமுட்டியிடறிய மு தூறுபோலமுகுலெட்டிமகரமென வாளைவேன்முனையை எதிர்சீறி; யெத்திசையினும்வருகாமராசன்மிகவொத்தியசுரர்களையாள வீசியடலெற்று மிலைஞ்சருயிர்கோலுநீலவின் மடமாதர்; வித்தைதனிலுறுதியாசையாகிய

வர்கைக்குணமருவு பொருளாகவாகிமலர் மெத்தைதனி
லுருகிமோகமாகிவிழ வதன்மேலே, வெச்சமிலைநடுவுமே
குமேகுமினி மற்றவனையழையுமாதரே யென்முன்விட்ட
படிறிகடநேசவாசைகெட வருள்வாயே, ஒத்திவிரிகமுகு
வாளைதாவுபுனலத்தி நகரமரசாளுவானிருளையொக்கு நி
னைவு முனிலாமலபாருபல நிலைகூற; வற்றதருமனடல்
வீமன் வெல்விசயன் வெற்றிநகுல சகதேவர்தேர் தனிலு
மொத்து முடுகிவிடு பாகன்வாளமரி லசுரேசன்; பத்து
முடிகடுகதாகவாகுவிரு பத்துமொருகணையில்வீழ நேர
வுணர்பட்டுமடியவமர்மோது காளமுகில் மருகோனே;
பச்சைமயிலில்வருவீர வேல்முருகதுட்ட நிருதர்குல கா
லவானவர்கள பத்தி யுடனடியில் வீழவாழ்வுதவு பெரு
மாளே.

——

பொது.

௫௧. தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன—தனதான

குறிப்பறிய குழற்மதி நுதற்புருவ விலுக்குமிரு குழைக்குவடுவிழிக்கு மெழுகுழலாலும்; கொடிப்பவள விதழ்க்குமிரு சுடர்த்தரளநகைக்கு மமுதினுக்கு மிகவு றத்தழுவு குறியாலும்; அறப்பெறிய தனத்துமன நடைக்குமினி னிடைக்குமலரடிக்குமிள நகைக்குமுள மயரா தே; யகத்தியனெடுமுரைத்தபொரு ளளித்தருளியரிப்பிர ம ரளப்பரியபதக்கமல மருள்வாயே; கறுத்தடருமரக்க ரணி கருக்குலையநெருக்கியொருகணத்திலவர் நிணக்கு டர்கள் கதிர்வேலாற்; கறுத்தருளியலக்கணுறு சுரக்கவ ர்கள் பதிக்குரிமை யளித்திடரை யருத்தருளு மயில்வீ ரா; செறுத்துவருகரித்திரள்கள் திடுக்கிடமன்மருப்பை யரி சினத்தினெடுபறித்தமர்செய் பெருகானிற்; செலக் கருதி யறக்கொடியசிலைக்குறவர்கொடித்தனமு சிறுத்த னமுமுறத்தழுவு பெருமாளே.

—*—

* வேளூர்.

௫௨. தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன—தனதான.

* வைதீசுரன்கோயில்.

நிறைந்ததுப்பிதழ்தேனூரல் நேரெனமறந்தத்ரித கணாலால நேரெனநெஞ்சுரிக்குழல் சீமூதநேரென விஞ்சிமேலே; நெருங்குபொற்றென மாமேருநேரென மருங்குனிட்கள வாகாசநேரென நிதம்பநற்பணி தானாகுமேயென வெந்தநாளும்; குறைந்தபுத்தியில் வாதாடியாதர வழிந்துமெத்தையின் மேல்வீழ; மால்கொடுமண்டையிட்டுடைசோர்வேளையாகமுலைந்துசீவன் குரைந்திளைப்புரமாமாயவாளவருள் மடந்தையர்க்கொரு கோமளமாகிய கொடுங்கசத்திடைமூழ்காமலேபத மென்றுசேர்வன்; மறைந்தசுக்ரிபர் போருடவேயொளியிருந்துநற்றயவாய் மீளவேயவன் மனங்களித்திடமாமேருநேரெனு நெஞ்சவாலி; மதஞ்செகுத்திட வீருனதோர்கணை வளைந்தவிற்சர மீதேவவானரம் வளைந்துசுற்றினுமேயோடி யாடிவணங்கிமேவ; அறந்தழைத்தநுமானோடு மாகடல்வரம்படைத்ததின்மேலேறி ராவணனரண்குலைத்தெதிர்போராடுநாரணன் மைந்தனான; வணங்கன்மைத்துன வேனேகளாமயில் விளங்குசெய்ப்பதிவேலாயுதாவழகணிந்தபொற்பெருவேளூரின்மேவிய தம்பிரானே.

திருவருணை.

ருங. தானதத்த தந்ததான தத்ததந்த
தானதத்த தந்த—தனதான.

தோதகப்பெறும் பயோதரத்தியங்கு தோகையர்க் குநெஞ்ச மழியாதே; சூலைவெப்படர்ந்த வாதபித்தமென்று சூழ்பிணிக்குணங்க ளணுகாதே; பாதகச்சமன்றன் மேதியிற்புகுந்து பாசம்விட்டெறிந்து பிடியாதே; பாவலர்க்கிரங்கி நாவினுக்கிசைந்த பாடன்மிக்கசெஞ்சொ றரவேணும், தேவமிக்கவந்து நாதமெய்க்கடம்ப வீரபத்ரகந்த முருகோனே; மேருவைப்பிளந்து சூரனைக்கடிந்து வேலையிற்றுளைந்த கதிர்வேலா, கோதைபொற்குறிஞ்சி மாதுகச்சணிந்த கோமளக்குரும்பை புணர்வேலா; கோலமுற்றுயர்ந்த சோணவெற்பிலங்கு கோபுரத்தமர்ந்த பெருமாளே.

சோலைமலை.

ருச. தானதனத் தானதனத்
தானதனத் தானதனத்
தானதனத் தானதனத்—தனதான.

சேலையடர்த்தாலமிகுத் தேகணையைச்சீறிவிதத்தா
றுசிவப்பேறுவிழிக் கடையாலே; வேனிரதத்தேமுழுகி
ப் பாகுநிகர்க்காரமுதத் தேறலெனக் கூறுமொழிச் செ
யலாலே; ஆலிலையைப்போலும் வயிற்றுள்ளலகத்தாலதர
த்தாரிரதத்தாலுமலைப் பிடுவோர்மே; லாசையினைத்தூர
விடத்தேபுகவிட்டேகிர்பைநற் றாளிணையைச்சேரவென
க் கருள்வாயே; காலனைமெய்ப்பாதமெடுத்தே யுதைதயிட்
டேவதனைக்காயவெரித்தேவிதியிற் றலையூடே; காசினியி
ற்காணவிரப்போன்மதியைச் சூடிபெருத்தேவிரித்தாறு
திரைக்கடன்மீதில்; ஆலமிடற்றனைகரித் தோலையுடுத்தீ
மமிதித்தாடியிடத்தேயுமைவைத் தரன்வாழ்வே; யாழி
யினைச் சூரனைவெற்பேழயில்தொட் டாவிதுணித்தாதி
திருச்சோலைமலைப் பெருமாளே.

பொது.

௫௫. தனதனனா தத்ததந்த
தனதனனா தத்ததந்த
தனதனனா தத்ததந்த—தனதான.

பழுதறவோதிக் கடந்துபகர்வன தீரத்துறந்தும்

பலபலயோகத்திருந்து மதராசன், பரிமள பாணத்தயர்ந்து பனேமடலூர்தற்கிசைந்து பரிதவியாமெத்தநொந்துமயல்கூற, அழுதழுதாசைப்படுங்க ணபிநவமாதர்க்கிரங்கியவர்பிரமாணத்துநெஞ்ச மறைபோய்நின், றழிவுறுநான்முற்பயந்த விதிவசமோமற்றையுன்ற னருள்வசமோவிப்ரபந்தரிகிலேனே, எழுதருவேதத்துமன்றி முழுதினுமாய்நிற்குமெந்தை யெனவொருஞானக்குருந் தருள்மேவு, மிருவுருவாகித்துலங்கி யொருகனதூணிற்பிறந்து விரணியன்மார்பைப்பிளந்த தனியாண்மை, பொழுதிசையாவிக்ரமன்றன்மருபுராரிக்குமைந்தபுளகபடீரக்கரும்பை யுடன்மேவும், புயகிரிவாமச்சிலம்பின் வனசரமானுக்குகந்து புனமிசையோடிப்புகுந்த பெருமாளே.

---

* பெரும்பற்றப்புலியூர்.

ரு சூ. தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன-தனதான.

---

* சிதம்பரம்.

விடுங்கைக்கொத்தகடாவுடையானிடை யடங்கிக்க ச்சிறை யானவனேமுகம் விழுங்கப்பட்டறவேயுடல்போ ய்கரு கிடமேலே, விளம்பத்தக்கனஞானமுமானமும் வி ரும்பத்தக்கன போகமுமோகமும் விடுஞ்சுத்தச்சவ மா வெளியாயுயிர் விடுநாளில், இடுங்கட்டைக்கிரை யாவடி யேனுட லிருந்திட்டுத்தமரானவர்கோவென விடங்கட்டி ச்சுடுகாடுபுகாமுன மனதாலே, யிருந்திட்டுப்பெற வேவி தியாயினு மிரண்டிற்றக்கதொருதியமானவை யிசைவா யே, கொடுங்கைபபட்டமராமரமேழுட னடுங்கச்சுக்கிரீப னோடமராடிய குரங்கைச்செற்றுமகோததிதூளெழ வ ருநேயன், குலுங்கப்பட்டநிசாசரர்கோவென விலங்கைக் குட்டழலோனெழநீடடி குமுண்டைக்குத்திரராவணர்மு டிவடியூடே, பிடுங்கித்தொட்ட சராசரநாரணர் பரியங்கி ட்டக்கனமாமருகாவயன் ப்ரபஞ்சத்துக்கொரு பாவலனு னென விடுதூதும், ப்ரசண்டச்சொற்சிவ வேதசிகாமணி ப்ரபஞ்சத்துக்குள வானசதாசிவம்பெரும்பற்றப்புலி யூர் தனின்மேவிய பெருமாளே.

பொது.

௫௭. தனத்ததானன தானனதந்தன
தனத்ததானன தானனதந்தன
தனத்ததானன தானனதந்தன-தனதான

கறுத்தநீர்விடு கூர்வேலெனுங்கடை சிவத்துநீடிய
வாமமீன்வண்குழை கடக்கவோடிய வாலாலநஞ்சென வ
ஞ்சநீடு, கயற்கணார்கனிவாயூறலுண்டவர் கழுத்துமாக
முமேகைபங்கொடு கலக்கமார்பொடுபாடீரகுங்குமகுன்ற
மூழ்கி, உறுத்தமார்புமுத்தர்தாவடங்களுமறுத்துநேரிய
கூர்வாணகம்பட வுடுத்தவாடையும் வேறாயுழன்றுகழன்
றுவீழ, முறுக்குநாபியில்மூழ்காமருங்குடை செறுக்கு
மாதர்தம் வாறார்தனங்களையொழித்ததோர்கரைகாணாத
நின்க்ருபையென்றுசேர்வேன், நிறுத்ததூபுர பாதாரவி
ந்தமு முடித்தமாலையும்வாரார்தனங்களு நிதத்திலேபடு
வேலானகண்களும் வண்டுபாடி, நெறித்தவோதியுநாயே
ன்மனம்புரி தவிக்கமால்தரலாமோகலந்திட நினைக்கலா
கெனவேல்வேடர்கொம்புட னன்புகூர்வாய், மறுத்துவா
ரிதிகோகோவெனும்படி வெறுத்திராவணன் வாணாளைய

ம்பினில் வதைத்தமாமனுமேவார்புரங்களு மண்டமேவ, வளர்த்ததாதையுமாருனகுன்றமுமனைத்து,லோகமும்வே தாகமங்க ளுதித்தசேவகனுளுமும்பர்கள் தம்பிரானே.

ரு அ. தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன-தனதான.

புருவத்தை நெறித்துவிழிக்கயல் பயிலிட்டுவெருட் டிமதித்திரு புதுவட்டைமினுக்கியளிக்குல மிசைபாடும், புயலசமறு விரித்துநிரைத்தொளி வலேயிட்ட கரத்தைய சைத்தகில் புனேமெத்தைபடுத்த பளிக்கறை தனிலேறி, சரசத்தைவிளேத்துமுலேக்கிரி புளகிக்க வணைத்துநகக்கு றிதனைவைத்து முகத்தைமுகத்துட ஞென்றுமேவித், த ணிவித்திரதத்தரத்துமி ழமுதத்தையளித்து யிருக்கியல் தருபித்தையகற்றி யுனேத்தொழ முயல்வேனே, பரதத் தையடக்கிநடிப்பவர் திரிபுரத்தையெரிக்கநகைப்பவர் ப ரவைக்குள்விடத்தைமிடற்றிடுபலீநீடு, கரகப்பரையுற்று மிகப்பகி ரதியுற்றசிரத்தையரரவத்தை யொறுட்பவிருப் பவருமையாளர், சுரர்சுத்தர்மனத்துறைவித்தகர்பணிபத்

தர்பவத்தையறுப்பவர் சுடலைப்பொடி யைப்பரிசிப்பவர் விடையேறுந், துணையொத்தபதத்தவரெற்றி விடுமதனை க்கடிமுத்தர்கருத்தமர் தலைவற்றகிர்பைக்குருதித்தருள் பெருமாளே.

பழநி

ருசு. தனனதனதன தனனதனதன

தானதானன-தனதான.

குவளைபொறுதிரு குழையைமுடுகிய கோலவேல்விழிமடவார்தங், கொடியமிர்கமதபுளகதனகிரிகூடிநாடொறுமயலாகி, துவளவுறுகியசரசவிதமதில் சோரவாறுதிமலையூடே, சுழலுமௌனதுயிரழியுமுனமுயர் தோகைமீதினில் வரவேணும், கவளகரதலகடகவிகடபொலபூதரமுகமான, கடவுள்கணபதிபிறகுவருமொருகாரணகதிர்வடிவேலா, பவளமரகதகனகவயிரக பாடகோபுரம் ரவிதேறும், பரியுமிடறிய பழநிமலைவரு பாவலோர்புகழ் பெருமாளே.

சிதம்பரம்.

௬௰. தனதந்த தத்ததந்த
தனதந்த தத்ததந்த
தனதந்த தத்ததந்த-தனதான.

மதவெங்கரிக்கிரண்டு வலுகொம்பெனத்திரண்டுவெளறுந்தனத்தணிந்த மணியாரம், வளர்செங்கதிர்க்குவிந்துலொளிகண்டெனத்துலங்கி நரருந்திகைத்திரங்க வருமானார், இதமிங்கிதபரியங்கொணகைகொஞ்சு நற்குணங்களிணையின்றெனக்கலங்கி விளையாடி, யிடுசங்கையற்றுணர்ந்து வலம்வந்துனைப்புகழ்ந்து தொழவின்றுபொற்பதங்கடரவேணும், நதியுந்திறுக்கரந்தை மதியுஞ்சடைக்கணிந்தநடநம்பருற்றிருந்த கயிலாய, நவகங்கையைப்பிடுங்குமசுரன்சிரத்தொடங்கை நவதுங்கவெற்றிமுந்துதிரளோடுஞ்; சிதையும்படிக்கொரம்புதனைமுன்றொடுத்தகொண்டல் வளர்செங்கணச்சுதன்றன் மருகோனே; தினமுங்கறுத்துணர்ந்து சுரர்நின்றுனைப்பணிந்த திருவம்பலத்தமர்ந்த பெருமாளே.

௬௧. தானனா தந்தனந் தானனா தந்தனந்
தானனா தந்தனந்-தனதான.

காதன்மோகந்தருங்கோதைமார் கொங்கைசிங்கார நாதஞ்செழுங் கனிவாய்கண்; காளகூடங்கொடுங்காலரு பெம்பாறும் காமபாணஞ்சுறும் பினம்வாழும்; ஓதிகார் சொன்மென் பாகுதேனென்றுயர்ந் தோகமோகந்தவென் றுரையாதே; யூசலாடும்புலன்ருரியேசென்றுநின் ருேயு மாறென்றையுங் கருதாதே; தாதகீசண்பகம் பூகமார்ச ந்தமமவாரவாசந்திசந் தளநீடுஞ்; சாமவே தண்டவெங் கோபகோதண்டசந் தானமாதெங்கள்பைம்புணமேவும்; தீதிலாவஞ்சியின் பாதமேகொண்டிடுஞ் சேகராதென்கு டந்தையின்வாழ்வே; தேவிபாகம்பொறுந் தாதிநாதன் றெழுந் தேசிகாவும்பர்தம் பெருமாளே.

௬௨. தானதாத்த தானதாத்த தனதன
தானதாத்த தனதன-தனதான.

ஆலமேற்றவிழியினர்காலே நீட்டியழுதழுதாகமாய் த்து முறைமுறை பறைமோத; வாடல்பார்க்கநிலேயெழு பாடைகூட்டிவிரையமயான மேற்றியுறவுன ரயலாகக்; காலமாச்சுவருகெனவோலேகாட்டி யமபடர்காவலாக்கி யுயிரது கொடுபோகக்; காமயாக்கைபொடிபடுநாளில்வா

ய்த்த கழலிணைகாதலாற்கருதுமுணர் தருவாயே; வேல கீர்த்திவிதரண சீலபார்த்திபகன்கவியாழகோத்ரமருவிய முருகோனே; வேதனுட்டில்விளைவுளவேனல்காத்த சிறுமியை வேடனுட்டில்வழிபடு மிளையோனே; ஞாலமேத்த வழிபடு மாறுபேர்க்குமகவெனநாணல்பூத்தபடுகையில்வருவோனே; நாதபோற்றியெனமுது காதைகேட்பவனுபவஞானவார்த்தையருளிய பெருமாளே.

சோணுசலம்.

௬௫. தனதன தானுதன தனதன தானுதன
தனதன தானுதன-தானதான.

விடமதவேள்வாளியின் விசைபெறு கோலாகல விழிகொடு போவாவென வுரையாடும்; விரகுட னுருயிரமனமுடை மாபாவிகள் மிர்கமத கோலாகல முலைதோய; வடையவு மாசாபர வசமுறு கோமாளியை யவனியு மாகாசமும் வசைகூறு; மசடனை ஞசாரனே யவலனே யாபாசனை யடியவரோடாள்வது மொருநாளே; வடகுல கோபாலர்த மொருபதி னுருயிரம் வனிதையர் தோடேய்தரு மபிராம; மரகத நாராயணன் மருமக சோணுசல வதிபசதாகாலமு மிளையோனே; யுடுபதி

சாயாபதிசுரர்பதி வாழ்வேபெற வுயர்மயின்மேலேறியே வரிதாக; வுயரியமாநாகமும் நிருதனுநீருய்விழ வொரு தனிவேலேவிய பெருமாளே.

சுச. தனனத்தன தானன தனனத்தன தானன
தனனத்தன தானன—தனதான.

இடருக்கிடராகிய கொடுமைக்கணைமேல்வரு மிறுதிச் சிறுகால்வரு மதனாலே; யியலைத்தருகானக முயலைத்தரு மேனியி லெரியத்தருமாதி நிலவாலே; தொடரக்கொடு வாகையி லடையக்கரைமேலலை தொலையத்தனிவீசிய கடலாலே, துணையற்றளிபூமல ரணையிற்றனியேயுயிர் துவளத்தகுமேதுயர் தொலையாதே; வடபொற்குலமேருவின் முடுகிப்பொருசூரனை மடியப்படையேவிய வடிவேலா மறவர்குலமாமொரு குறமெய்த்திருமாமகள் மகிழப்புன மேவிய மயில்வீரா, அடர்பட்டுருகேதகி மடமிற்றழை சேர்வய லருணைத்திருவீதியி லுறைவோனே; யவனித் திருமாலொடு சிவனுக்கிமையாவிழி யமரர்க்கரசாகியபெருமாளே.

சுவாமிமலை.

சுரு. தானதனதன தானதனதன
தானதனதன—தனதான.

பாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரே
சா; பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மண
வாளா; காதுமொருவிழி காகமுறவருள் மாயனதுதிரு
மருகோனே; காலனெனையணு காமலுனதிரு காலில்வழி
பட வருவாயே, ஆதியயனொடு தேவர்சுரருல காளும்வ
கைதரு சிறைமீளா, தாடுமயிலினி லேறியமரர்கள் சூழ
வலம்வரு மிளையோனே, சூதமிகவளர் சோலைமருவுசுவா
மிமலைதனி லுறைவோனே; சூரனுடலற வாரிசுவறிட
வேலைவிடவல பெருமாளே.

திருத்தணிகை.

௬௬. தனதந் தனதத் தனதந் தனதன
தனதந் தனதத்—தனதான.

குயிலொன்றுமொழிக் குயினின்றலையக் கொலையின்ப
மலர்க் கணையாலே, குளிருந்தவளக் குலசந்தரவொளிக்
கொடிகொங்கையினமுத் தனலாலே; புயல்வந்தெறியக்
கடனின்றலறப் பொருமங்கையருக் கலராலே; புயமொ
ன்றமிகத் தளர்கின்றதனிப் புயம்வந்தணையக் கிடையா
தோ, சயிலங்குலையத் தடமுந்தசுரச் சமனின்றலையப்
பொரும்வீரா, தருமங்கைவளக் குறமங்கையர்மெய்த் த
னமொன்றுமணித் திருமார்பா, பயிலுங்ககனப் பிறைத
ண்பொழிலிற் பணியுந்தணிகைப் பதிவாழ்வே; பரமன்

பணியப் பொருளன்றருளப் பகர்செங்கழனிப் பெருமாளே.

பொது.

சூஎ. தந்ததானன தந்ததானன,

தந்ததானன—தனதான.

கண்டுபோல்மொழி வண்டுசேர்குழல் கண்கள்சேல்மதி முகம்வேய்தோள்; கண்டுபாவனை கொண்டதோள்களி லொன்றுகாதலி லிருகோடு, மண்டிமார்பினில் விண்டதாமென வுந்துகூர்முலை மடவார்தம்; வஞ்சமாமதில் நெஞ்சுபோய்மடி கின்றமாயம தொழியாதோ; கொண்டகோகில மண்டுவார்குழல் மொழிகூறுங், கொங்கையாள்குற மங்கைவாழ்தரு குன்றில்மால்கொடு குளிராகும், விண்டுமாமன மண்டுசூர்கடல் வெம்பமேதினி தனில்மீளா, வென்றியானைவயு மின்றிவேளையும் வென்றுமேவிய பெருமாளே.

* குருகிரி.

சூஅ. தனதனதத்தத் தத்தன தத்தத்

தனதனதத்தத் தத்தன தத்தத்

தனதனதத்தத் தத்தன தத்தத்—தனதான.

---

* சுவாமிமலை.

தலைமயிர்கொக்குக் கொக்கநரைத்துக் கலகலெனப்பற் கட்டதுவிட்டுத் தளர்நடைபட்டுத் தத்தடியிட்டுத் தடுமாறி, தடிகொடுதத்திக் கக்கலகலபொருத்திட் டசனமும்விக்கிக் கத்தியெடுத்துச் சளியுமிகுத்துப் பித்தமுமுற்றிப் பலகாலுஞ், சிதையிலத்திட் டொக்கவெரிக்கத் திரிபலைசுக்குத் திப்பிலியிட்டுத் தெளியவடித்துத் துற்றிடலுற்று வயிர்போமுன், சிலபுகழ்கற்றுச் சொற்கள்பயிற்றித் திருவடியைப்பற்றித் தொழுதுற்றுச்சென்ன மறுக்கைக்குப்புரமுத்திக் கருள்வாயே, கலணைவிசித்துப் பற்கறையிட்டுப் புரவிசெலுத்திக் கற்கொடுவெற்பைப் பகடுநடத்தித் திட்டெனவெட்டிப் பொருசூரன், கனபடைகெட்டுத் தட்டறவிட்டுக் குரைகடல்குக்குக் குக்கிடவெற்றிக் களிமயிலைச்சிந் ரத்தில்நடத்திப் பொருகோவே; குலிசனம்கட்குப் பொற்புயமுற்றுக் குறவமகட்குச் சித்தமுமுற்றுக் குளிர்புனலுற்றுத் தத்துபுனத்திற் றிரிவோனே, கொடியபொருப்பைக் குத்திமுறித்துச் சமரம்விளைத்துத் தற்பரமுற்றுக் குருகிரியிற்சித் தத்தொடிருக்கும் பெருமாளே.

---

௬௯. தனனதன தனனதன
தனனதன தனனதன
தனனதன தனனதன—தனதான

அளகநிறைகுலேயவிழி குவியவளேகலகலென வமுத மொழிபதறியெழ வணியார, மழகொழுகுபுளகமுலே குழையவிடைதுவளமிக வமுதநிலேயருள்பரவ வதிமோகம், உளகமுருகவருகலவி தருமகளிர்கலவிதனி லுழலுமது,கடுவமதி யொழியாதோ; யுலகடையமயிலின்மிசை நொடியளவும்வருமளவி லுனதுமதுமலரடியை யருள்வாயே, வளேயுமலேகடல்சுவற விடுபகழிவரதனருள் மருதினெடுபொருதருளு மபிராம, வரியரவின்மிசைதுயிலும் வரதசயமகள்கொடுமை மறுகியமர்முடுகிவிடு நிருதேசன், தளமுறியவரைதகர வசுரருடல்தலேசிதற தகனமெழமுடுகவிடு வடிவேலா, தளரமணிவடமிலகு குறவர்திருமகள்கணவ சகலகலேயெழுதவல பெருமாளே.

திருவாரூர்,

௭௰. தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான.

கரமுமுளரியின் மலர்முகமதிகுழல் கனமதெனுமொழி கனிகதிரிளநகை கலகமிடுவிளி கடலெனவிடமென மனதூடே; கருதியனநடை கொடியிடையியல்மயில் கமழுமகிலுட னிளகியமிர்கமத களபபுளகித கிரியினுமயல்கொடு திரிவேனை; இறவுபகலற பவமறவினைவற வியலுமயல்தர விழியினில்விழிவர விசையமுழுகிய வொருகளபதமுற மடலூடே, யெழுதவரியவள் குறமகளிருதன கிரியில்விழுதின மிளையவனெனுமுரை யினிமைபெறுவதுமிருபதமடைவது மொருநாளே, சுரபிமகவினை யெழுபொருள்வினவிட மனிவினெறிமணி யுசைவதவிசைமிகு துயரில்செவியினி லடிபடவினவுபி னதிதீது; துணிவிலிதுபிழை பெரிதெனவருமனு வுருகியரகரசிவசிவவெனுமதொர் சுரபியலம்வரவிழிபுனல்பெருகிட நடுவாகப், பரவியதனதுதுயர்கொடுநடவிய பழுதினமதலையை யுடலிருபிளவொடுபடியவிரதமு னடவிடமொழிபவ னருளாரூர், பதியிலறுமுக சிவசுதகணபதி குமரகுருபர திருப்திசரவண பரவைமுறையிட மயில்கொடுநடவிய பெருமாளே.

—*—

பழநிமலை.

௭௧. தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத்—தனதான.

குறித்தமணிப் பணித்துகிலைத் திருத்தியுடுத்திருக் குழலைக் குலைத்துமுடித்திலைச்சுருளைப் பிளவோடே, குதட்டியிதழ்க்கடித் துதவியசுற்கடையிட் டழைத்துமருட் கொடுத் துணர்வைக்கொடுத்துநகக் குறிமேலே, பொறித்ததனத்தனைத்துமனச் செருக்கினர்கைப்பொருட் கவரப்புணர்ச் சிதனைப்பிணிப்படுவித் திடுமாதர், புலத்தலையிற்செலுத்துமனப் பரமத்தையரப் பிரசித்தமுறப் பிரித்தருளித் திருக்கழலைத் தருவாயே, பறித்தலையிற்றிருட்டுமணக் குருக்கள்சட் டுருககளிடைம்புழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு, பரப்புமனத் திருப்பதிக்க கனற் புனலிற் கனத்தசொலைப் ட்டத்தெழுதித் திரட்டுபுகழ்க் கவிராச, செறித்திருளசிக் கதிற்றுயிலுற் றுப்பனெனத் தகப்பனெனச் சிறக்கவுறைத்தருள்கருணைப் பெறுவாழ்வே, திசைக்கருணைப்பதிக்குளனைத் தடுத்தடிமைப் படுத்தியருட் டிருப்பழனிப்பதிக்குமரப் பெருமாளே,

---

திருப்பிரமபுரம்.

எஉ. தனதனதந்தன தந்தனதந்தன
தனதனதந்தன தந்தனதந்தன
தனதனதந்தன தந்தனதந்தன — தனதான.

பிறவியெனெகிழ்ந்து மருண்டுவெருண்டுறு சமயமுமென்றுலே யென்றுவரும்படி தலைவருகின்று கலங்கியவிரும்பிய தமிழ்கூறுஞ்; சலிகையுநன்றியும் வென்றியுமங்குளபெறுமைகளுங்கன முங்குணமும்பயில் சரவணமும்பொறை யம்புகழுந்திகழ் தனிவேலும்; விறுதுதுலங்குசி கண்டியுமணடரு முருகிவணங்கி வரும்பதமும்பல விதரணமுந்திர முந்தரமுந்தினே புனமானும்; மிர்கமதகுங்கும கொங்கையுநொந்தடி வறுடிவணந்து புணர்ந்துதவும்பல விசயமுமன்பி னொழிந்துமொழிந்தியப் புகல்வேனே, கறுதியிலங்கை யழிந்துவிழும்படி யவுணரடக்கமறிந்துவிழும்படி கதிரகனிந்துவிளங்கிவரும்படி விடுமாயன், கடகரியஞ்சிநடுங்கிமுறிந்திட மடுவினில்வந்து தவம்புயமந்தரன் கருணைமுகுந்த னரங்கன்வருஞ்சக டறமோதி; மறுதுகுலுங்க மலங்கமுனிந்திடு வரதனலங்கல் வினேந்தருளுங்குறள் வடிவனெடுங்கடல் மங்கவொரம்புகை தொடுமீளி; மருகபுரந்தர னுந்தவமொன்றிய பிரம

புரந்தனி லுங்குகனென்பவர் மனமதிலும்புரி வொன்றி யமர்ந்தருள் பெருமாளே.

எ௩. தனதன தனதன தந்ததானன
தனதன தனதன தந்ததானன
தனதன தனதன தந்ததானன—தந்ததான.

கனைகடல்வயிறு குழம்பலாய்விட வடதமனியகிரி கற்பமாய்நட கணபணவிகடித தொந்தகாளபுயங்கராசன், கயிறெனவமர ரனந்தகோடியு முறைமுறையமுது கடைந்தநாளொரு கதறியிவுலகைவிழுங்குமேக வொழுங்குபோல, வினைமதகரிகளு மெண்டிசாமுக கிரிகளும்வெருவிட வண்டகோளகை வெடிபடவெவரையும் விஞ்சிமேவிடு நஞ்சும்பால, விடுகுழையளவு மளந்தகாமுக ருயிர்பலிகவர்வுறு பஞ்சபாதகவிழிவலை மகளிரொடன்புகூர்வதொழிந்திடாதோ, முனைபெறவாயமணிந்தமோசர நிசிசரர்கடகமுறிந்துதூளெழ முகிலினம்வெருவ விருண்டதாரக னஞ்சிமீள, முழுகியதிரதரங்கக்காகர முறையிட விமையவர் தங்களூர்புக முதுகிரியுருவ முனிந்தசேவக செம்பொன்மேரு, அனையகனகவி பவங்கொள்கோபுரவருணையினுறையுமருந்துணுமலை யபிரமவனிதைதரும்குமார விலங்குமார்பா, வடவியில்வடிவ கரந்துபோயொ

ரு குறமகள்பிறகுதிரிந்தகாமுக வரிகரபிரமபுரந்தராதிப
ர் தம்பிரானே.

எச. தையதனதானத்—தனதான.

துள்ளிமதவேள்விகைக் கணையாலே, தொல்லைநெடுநீ
லக் கடலாலே, மெள்ளவருசோலைக் குயிலாலே; மெய்யு
ருகுமானைத் தழுவாயே, தெள்ளுதமிழ்பாடத்தெளிவோ
னே, செய்யகுமரேசத் திறலோனே, வள்ளல்தொழுஞா
னக் கழலோனே; வள்ளிமணவாளப் பெருமாளே.

நிம்பபுரம்.

எரு. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான தனதான.

அஞ்சுவிதபூத முங்கரணநாலு மந்திபகல்யாது மறி
யாத, வந்தநடுவாரு மொன்றுமிலதான வந்தவொருவீடு
பெறுமாறு, மஞ்சுதவழ்சார லஞ்சயிலவேடர் மங்கைத
னைநாடி வனமீது, வந்தசரணார விந்துமதுபாட வண்ட
மிழ்விநோத மருள்வாயே, குஞ்சரகலாப வஞ்சியபிராமி
குங்குமபடீர வதிரேக, கும்பதடமீது சென்றணைம்மாறு
குன்றுதடுமாற விகலகோப; வெஞ்சமறசூர னெஞ்சுப
கைதீர வென்றிவடிவேலை விடுவோனே; விம்பமதில்சூ
ழு நிம்பபுரவாண விண்டலமகீபர் பெருமாளே.

௭௪. தனனதனத்தத் தனந்தனந்தன
தனனதனத்தத் தனந்தனந்தன
தனனதனத்தத் தனந்தனந்தன—தந்ததான,

முகமினுக்கிப் பெறுங்கருங்குயில் முகிலையவிழ்த்துச் செறுந்திசண்பக முடியைநிறத்துப்புறம்வந்தடி முன்பிணுக, முலையையசைத்துத் திரிந்துமுன்றறிந் தலையைநெகிழ்த்துப் புனைந்துவஞ்சக முறுவல்விளைத்துத் துணிந்துதந்தெரு முன்றிலூடே, மகளிர்விருப்பிற் சிறந்தபந்தியின் மதனனுநிற்கக் கொழுந்துவெண்பிறை வடவையெறிக்கத் திரண்டுபெண்தனை வண்டுபாட; மயல்நிலத்துக் கரந்ததென்றலு நிலைகுலையத்தொட்டுடம்புபுண்செய்து வயலையனிக்கக் குழைந்துசிந்தமலங்கலாமோ; பகவவன் மட்கப் புகுந்துகந்தர ககனமுகட்டைப் பிளந்துமந்தர பருவரையொக்கச் சுழன்றுபின்பு பறந்துபோக, பண்மணிபட்சத்துரங்கமுன்றனி முடுகிநடத்தக் கழிந்துவிந்தெழு பரவையரற்றப் பிரபஞ்சநின்று பயந்துபாடக், குகனெனமுக்கட் சயம்புவுமப்ரிய மிகளசுரர்க்குக் குரம்பைவந்திட விகலமர்குத்திப் பொறுங்கொடும்படை வென்றவேளே; குழையணியொப்பறிருந்த சங்கரிகவுரியெடுத்தும் பரிந்துகொங்கையி னமுதையளிக்கத் தெரிந்துகொண்டருள் தம்பிரானே.

திருவருணை.

எஎ. தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித்தேனெனைச் செயலொழித்தாயெனக் கண வகெட்டேனெனப் பெறுமாறு; கறுதுபுத்ராவெனப் பு கல்வரப்பாவெனக் கதறிடப்பாடையிற் றலைமீதே; பயி ல்குலத்தாரழப் பழையநட்பாரழப் பறைகள்கொட்டா வரச் சமனாரும்; பரியகைப்பாசம்விட் டெறியுமப்போ தெனைப் பரிகரித்தாடையைத்தரவேணும்; அயலிடைக் கேவல்கைப்பரிதரத் தோகையும் றருணையிற்கோபுரத்து றைவோனே; யமரரததாசிறுக் குமரிநட்பாகனத் தரிய சொற்பாவலர்க் கெளியோனே; புயலிளைப்பாறுபொற் ச யிலமெய்ச்சாரலிற் புனமறப்பார்வையைப் புணர்வோ னே; பொடிபடப்பூதரத் தொடுகடற்சூரனைப் பொறு முழுச்சேவகப் பெருமாளே.

எஅ. தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆலுமயில்போலுதத் தோகையர்களேமெத்த வாரவ டமேலிட்ட முலைமீதே; யானைதுகிலேயிட்டு வீதிதனி

லேநிற்கு மாமைநடையாரிக்கு மொழியார்பால்; மாலொ டவர்போகத்தி லேகுலவியேமித்தம் வாடுமெனைநிசித்த மகிழ்வாகி; மாகமுகடாறுகர வேகமயிலேயுற்று வாழ்வு பெறவேமுத்தி தருவாயே, நாலுமுகவேதற்கு மாலிலேயி ன்யாயற்கு நாடவரியாற்பெற்ற வொருபாலர்; நாகமுடிமீ துற்ற ஞாலமதிலேபத்தர் ஞானமுனிவோர்கட்கு மிறை யோனே; வேலைவிழிவேடச்சி யோடமரர்மாதொக்க வி றருணைமால்வெற்பி லுறைவோனே; வீரமுடனேயுற்ற சூரர்கிளைவீழ்விக்க வேலைமிகவேவிட்ட பெருமாளே.

எசு. தானதனதானத் தானதனதானத்
தானதனதானத்—தந்ததான.

ஆலவிழிநீலத் தாலதரபானத் தாலளபாரக் கொண் டலாலே; யாரநகையால்விற் போலுநிதலால்வித் தாரந டையாலவற் கொங்கையாலே; சாலமயலாலக் காலதிரு சூலத் தாலிறுகுபாசத தும்பினாலே; தாழ்விலுயர்பாழ் பட் டேழ்வினைவிடாமற் சாகுமுனிவைவற் கொணடிடா தோ: சோலைகறுகானிற் கோலமறமானைத் தோளிலுற வாகக் கொண்டவாழ்வே; சோதிமுறுகாநித் தாபழய ஞாலச் சோணகிரிவீதிக் கந்தவேளே, பாலக்கலாபக்

கோமளமயூரப் பாகவுமைபாகத் தன்குமரா: பாதமலர் மீதிப் போதமலர் தூவிப் பாடுமவர்தாழ்நற் றம்பிரானே.

பொது.

அய. தானந்தனதன தானந்தனதன
தானந்தனதன—தனதான.

தீயும்பவனமு நீறுந்தரணியும் வானுஞ்செறிதரு பசுபாசத், தேகந்தனேநிலே யேயென்றிறுவினே தீறுந்திரலினே யறியாதே, ஓயும்படியறு நூறும்பதுமுதல் நூறும்பதினிறு பதினூறு, மோடுஞ்சிறுவுயிர் மீளும்படிநல யோகம்புரிவது கிடையாதே? வேயுங்கணியும் விளாவும்படிபுனமேவுஞ்சிறுமிதன் மணவாளா, மீனம்படுகட லேழுந்தழுலெழ வேதங்கதரிட வொருநாளும்; வாயுங்குலகிரி மாவுந்தொளேபட மாகந்தரமதில் மறைசூரன்; மார்புந்துணையுறு தோளுந்துணிபட வாள்கொண்டமர்செய்த பெருமாளே

அக. தனனதாத்தன தனனதாத்தன
தனனதாத்தன—தந்ததான

பொதுவதாய்த்தனி முதலதாய்ப்பக்க லிரவதாய்ப்பக லிரவதாய்ப்புகல் கின்றவேதப்; பொருளதாய்ப்பொருண் முடிவதாய்ப்பெறு வெளியதாய்ப்புதை வின்றிஞா

ன? கதியதாய்க்கரு தரியதாய்ப்பறு கமுதமாய்ப்புலனை
ந்துமாயக்; கரணமாய்த்தெனை மறணமாற்றியறுணவார்
த்தையை யென்றுசேர்வேன்; உத்திப்படகிகுதர ரர்ப்பெ
மூவுலகுபோற்றிட வெங்கலாப; வொறுபராகர மதுரக
மோட்டிய வுரகர்போற்றிய நண்வானோர்; முதல்வபார்
ப்பதி புதல்வகார்த்திகை முலைகள்தேக்கிட வுண்டவாழ்
வே, முளரிபாற்கடல் கயிலமேற்பயில் முதியமூர்த்திகள்
தமபிரானே.

௮௨ தனத்தத் தந்தனத் தனத்தத் தந்தனத
தனத்தத் தந்தனத்—தனதான.

தடக்கைப்பங்கயக் கொடைக்குக்கொண்டறண் டமி
ழ்க்குத்தஞ்சமென் றுலகோரைத்; தவித்துச்சென்றிரந்
துளத்திற்புண்படுந் தளர்த்திட்டம்பரந் தனையூசற்; கட
த்தைத்துன்பமண் சடத்தைத்துஞ்சிடுங் கலத்தைப்பஞ்
சவிந் தரியவாழ்வைக்; கணைற்றிற்சென்றிடந் திறத்தித்
தண்டையங் கழற்குத்தொண்டுகொண் டருள்வாயே; ப
டைக்கப்பங்கயன் றுடைக்கச்சங்கரன் புரக்கக்கஞ்சமன்
பணியாகப்; பணித்துந்தம்பயந் தணித்துச்சந்ததம் பர
த்தைக்கொண்டிடுந் தனிவேலா;குடக்குதென்பரம்பொ
றுப்பிறறங்குநங் குலத்திற்சங்கைதன் சிறியோனே; குற
ப்பொற்கொம்பைமுன் புனத்திற்செங்கரங் குவித்துக்கு
ம்பிடும் பெருமாளே.

திருவருணை.

௮௧. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவாடமுகத்தி லெழுகனவிலேபிறக்கு முழுமதி
நிலாவினிற்கும் வசையாலும்; மொழியுமடமாதருக்கு மி
னியதனிவேயிசைக்கு முதியமதராசனுக்கு தழியாதே:
புழுகுதிகழ்நீபமத்தி லழகியகுராநிறத்த புதுமையினி
லாநிறட்டி புயமீதே; புறணறும்வகைதானிளைத்த துண
றும்வகைநீலசித்ர பொறுமயிலிலேறிநித்தம் வரவேணு
ம்; எழுமகரவாரிசுற்று பொழிலருணைமாநகர்க்கு ளெழு
தறியகோபுரத்தி லுறைவோனே; யிடைதுவளவேடுவச்
சி பவளவிதழேதுடிப்ப விளமுலைவிடாதசித்ர மணிமா
ர்பா, செழுமதியநாகமொய்த்த வெழுகுபுனல்வேணிவை
த்த சிவனைமுதலோதுவித்த குருநாதா; திசைமுகன்மு
ராரிமற்று மரியபலதேவருற்ற திறையடையமீளவிட்ட
பெருமாளே.

விராலிமலை.

௮௨. தானதத்தன தானதத்தனத் தானதத்தன
தானதத்தன—தனதான.

நீர்புயற்குழன்மாதர் பேரினிற்கிருபையாகி நேச
முற்றடியேனு நெறிகேடாய்; நேமியிற்பொரு டேடி
யோடியெய்த் துளம்வாடி; நீதியிற்சிவ வாழ்வைநினை

யாதே; யாழினுக்கிறையாம ஞமம்வைத்தொருகோடி
பாடலுற்றிடவேசெய் திடுமோச; பாவியெப்படிவாழ்க
தேவர்கட்குளதான பார்வைசற்றருள்வேறு பணியாயோ
ஆழியிற்றுயில்வோனு மாமலர்ப்பிரமாவு மாகமப்பொரு
ளோறு வனைவோரு; மானைமத்தகவோனு ஞானமுற்றி
யல்வோரு மாயிரத்திருநூறு மறையோரும்; வாழுமெய்
த்தவர்சூழ்வி ராலிவெற்பினின்மேவு வாகுசித்திரதோ
கை மயிலேறி; மாறெனப்பொருசூர னீறெழப்பொரும்
வேல மான்மகட்குளனை பெருமாளே.

திருவேரகம்.

அரு. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

சரணகமலாலயத்தை யரநிமிஷநேரமட்டில் தவமு
றைதியானம்வைக்க வறியாத; சடகசடமூடமட்டி பலவி
னையிலேசனித்த மியன்மிடியான்மயக்க முறுவேனை, க
ருணைபுரியாதிருப்ப தென்குறையிவேளைசெப்பு கயிலை
மலைநாதர்பெற்ற குமரோனே; கடகபுயமீதிரத்ன மணி
யணிபொன்மாலைசெச்சை கமழுமணமார்கடப்ப மணி
வோனே; தருணமிதையாமிகுத்த கனமறுதுநீள்சவுக்ய
சகலசெல்வயோகமிக்க பெறுவாழ்வு, தகைமைசிவஞா
னமுத்தி பரகதியுநீகொடுத்து தவிபுரியவேணுநெய்த்த

வடிவேலா, அருணதளபாதபத்ம மதுநிதமுமேதுதிக்க வரியதமிழ்தானளித்த மயில்வீரா, வதிசயமநேகமுற்ற பழனிமலைமீதுதித்த வழகுதிருவேரகத்தின் பெருமாளே.

கதிர்காமம்

௮௬. தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா — தனதான.

சரத்தேயுதித்தா யுரத்தேகுதித்தே சவர்த்தாயெதிர்த்தே வருசூரைச்; சரிப்போனமட்டே விடுத்தாயடுத்தாய்க் கர்த்தாயுடற்றா னிறுகூறாய்ச்; சிரத்தோடுரத்தோடறுத்தேகுவித்தாய் செகுத்தாய்பெலத்தார் விருதாகச்; சிறைச்சேவல்பெற் றாயலக்கான்மிதித்தாய் திருத்தாமரைத்தா ளருள்வாயே, புரத்தார்வரத்தார் சரச்சேசரத்தார் பொரத்தானெதிர்த்தே வருபோது, பொருத்தார்பரித்தார் சிரித்தாரெரித்தார் பொரித்தார்நுதற்பார் வையிலேயின்; கரித்தோலுரித்தார் விரித்தார்தரித்தார் கருத்தார்மருத்தார் மதனுரைக், கரிக்கோலமிட்டார் கணுக்கானமுத்தே கதிர்க்காமமுற்றூர் முருகோனே.

திருப்புலியூர்.

௮௭. தனனதனதன தனனதனதன
தனனதனதன தனனதனதன
தத்தத்தத்தன தத்தத்தத்தன
தத்தத்தத்தன தத்தத்தன தன—தனதான.

மருவுகடன்முகி லனையகுழன்மதி வதனநுதல்சிலை ம
ழையதெனும்விழி மச்சப்பொற்கணை முக்குப்பொற்கு
மி ழொப்பக்கத்தரி யொத்திட்டச்செவி குமுதமலர்தமு
முதமொடுநிரை தளரமெனுநகை மிடறுகமுகென வை
த்துப்பொற்புய பச்சைத்தட்டையொ டொப்பிட்டுக்கம
லக்கைப்பொற்றுகி ரனையவிரலொடு கிளிகள்முகநகமெ
னவுமிகலிய குவடுமிணையுறு செப்புத்தக்கமருப்புச்சக்க
யம் வைத்தட்பொற்குட மொத்திட்டுத்திகழ் முலைமேவு
ம்; வடமுநிரைநிரை தரளபவளமொ டசையபழுமரவி
லைவயிறுமயிரறபத்திக்கிணை பொற்புத்தொப்புளு மப்பு
க்குட்சுழியொத்துப்பொற்கொடி முடிமினவிடு மிடை
யுமிழதென வரியகடிதட வமுதுகழைரச மட்டுப்பொற்
கமலத்திற்சக்கிரி முத்திப்பைங்கொரு முத்துப்பட்டுடை
யழகுதொடையிணை கதலிபரடென மொழியுமுழவொடு

தமடநிகர்குதிவட்டப்புத்தகமொத்துப் பொற்சரணத்தி
ற்பிற்புற மெத்துத்தத்தைகள் மயில்போல; தெருவில்மு
லைவிலை யுரைசெய்தவரவர் மயல்கொடணைவர மருள்செ
ய்தொழில்கொடு தட்டிப்பொற்பல சொக்கிட்டுப்பொரு
ள் பற்றிக்கட்டிலணைக்கொப்பிப் புணர்திலகமழிபட வி
ழிகள்சுழலிட மலர்களிணைகுழ லிடைகொள் துயில்பட
இத்துப்பிதழ் வைத்துங்கைக்கொடு கட்டிக்குத்துமுலை
க்குன்கைப்பட திரையிலமுதென கழையிரசமெனபலவி
ல்கணையென வுருகபிணிபல சிக்குப்பட்டுடல் கெடரிச்சி
த்தமும் வெட்கித்துக்கமு மொத்துக்கொக்கென கரை
மேவி; செவியொடொளிர்விழி மறையமலசல மொழிக
ள்பலவுரை குழற்றடிகொடு தெத்திப்பித்தமு முற்றித்த
ற்செய லற்றுச்சிச்சியெனத்துக்கப்பட சிலர்கள்முதுவட
ல்வினவுபொழுதினி லுவரிநிறமுடை நமனுமுயிர்கொள
செப்பற்றுப்பிண மொப்பித்துப்பெயரிட்டுப்பொற்பறை
கொட்டச்செப்பிடு செனனமிதுவென வழுதமுகமிசை
யலறியனையவரெடென்சுடலையில் சிற்றித்திங்கிரை யிட்
டிட்டிப்படி நித்தத்துக்கமெடுத்திட்டுச்சட முழல்வே
னே; குருவினுருவென வருள்செய்துறையினில் குதிரை
கொளவரு நிறைதவசிதலைகொற்றப்பொற்பதம் வைத்தி
ட்டற்புத வெற்றிப்பொற்பொருவிட்டுக்கை கொளுமுத

லவனிளகலை மதியுமடைசடை யருணைவரசல மழுவுமு
ழையணி வொட்டத்துப்புரர் கெட்டுப்பொட்டெழ விட்
டத்திக்கினை நக்கற்கற்புத குமரனென விரு தொலியுமுர
சொடு வளையுமெழுகட லதிர்வினமுழவொடு துட்டத்த
க்கரை வெட்டித்தடகட லொப்பரதிக்கு மெடுத்துத்தத்
திட வமர்மேவி; குருகுகொடிசிலை குடைகள்மிடைபட
மலைகள்பொடிபட வுடுகளுதிரிட கொத்துச்சக்கிரி பற்றி
ப்பொற்கரி யெட்டுத்திக்குமெடுத் திட்டுக்குரல்குமரகுரு
பர குமரகுருபர குமரகுருபர வெனவொதவரர்கள்கொ
ட்டப்புட்ப மிறைத்துப்பொற்சரணத்திற் கைச்சிரம்வை
த்துப் புட்குரல்குலவ நரிசிறைகழுகுசொடிபல கருடன
டமிடக்குருதி பருகிடகொத்தப் பத்திரமிட்டுப் பொற்க
கனத்தைச் சித்தமிரட்சித்துக்கொளு மயில்வீரா, சிர
மொடிரணிய னுடல்கிழியவொருபொழுதி னுகிர்கொடு
வயநடமிடு சிற்பத்திப்பதம் வைத்துச்சககர வர்த்திக்
குச்சிறை யிட்டுச்சுக்கிரனரியவிழிகெட வொருபதமுடி
யுமழியநெடியவர் திருவுமழகியார் தெற்குத்திக்கிலரக்க
ற்குச்சின முற்றுப்பொற்றசாதற்குப்புத்திர செயமுமன
வலி சிலைகைகொடுகர மிருபதுடைகிரிசிரமொர்பதுவிழ
திக்கெட்டைக்கக னத்தர்க்குக்கெடு பச்சைப்பொற்புய
லுக்குச்சித்திர மருகோனே; திலகமதிமுகவழகிமரகத

வடிவிடரிபுர நடனிமலர்பத சித்தற்குக்குறி வைத்திட்டுத்தளமுத்துப்பொற்கிரி யொத்துச்சித்திர சிவகொள்திருசரசுவதிவெருவித சொருவிமுதலிய கிழவியியல்கொடு கெட்டிக்கிச்சுகமுத்துத்தத்துவ சித்திற்சிற்பதம் வைத்துக்கற்புறு திரையிலமுதெள மொழிசெய்கவுரியினரிய மகனெனபுகழ்புலிநகரில கெட்டிப்பொற்றென முற்றுப்பொற்குற தத்தைக்குப்புளகித்துட்டொப்பிய பெருமாளே.

—✱—

பொது

௮௮. தத்தனதானான தத்தனதானான
தத்தனதானான—தனதான.

சுட்டதுபோலாசைவிட்டுலகாசார துக்கமிலாஞான சுமமேவி; சொற்கரணாதீத நற்குணமூடாடு சுத்தநிராதார வெளிகாண; மொட்டலர்வாரீச சக்ரசடாதார முட்டவுமீதேறு மதிமீதாய்; முப்பதுமீராறு முப்பதும்வேறான முத்திரையாமோன மடைவேனோ; எட்டவொணாவேதனத்தணிகோ கோவெனப்பெருமான்மேவு இரைசாய; வெற்றியவேழாழி வற்றிடமாறுத வெத்தனையோகோடி யசுரேசர், பட்டொருசூரமாள விக்ரமவேதேவு பத்திருதோள்வீர தினைகாவல்; பத்தினிதோடோயு முத்தமமாறுத பத்திசெய்வானாயர் பெருமாளே.

திருக்குறட்டி.

௮௬. தானதனதத்ததான தானதனதத்ததான
தானதனதத்ததான—தனதான.

நீரிழிவுகுட்டமீளை வாதமொடுபித்தமூல நீள்குளிர்வெதுப்புவேறு முளநோய்கள்; நேருறுபுழுக்கள்கூடுநான்முகனெடுத்தவீடு நீடியவிரத்தமீளை தசைதோல்சீ;பாரிய நவத்துவார நாறுமுமலத்திலாறு பாய்பிணியியற்று பாவை நரியாய்பேய்; பாரெருமுகழுக்கள்கூகை தாமிவை புசிப்பதான பாழுடலெடுத்துவிணி லுழல்வேனோ; நாரணியதிதிநாரி யாதுசமயத்திபூத நாயகரிடத்திகாமி மகமாயி; நாடகநடத்திகோல நீலவருணத்திவேத நாயகியுமைச்சிநீலி திரிசூல; வாரணிமுலைச்சிஞான பூரணிகலைச்சிநாக வாணுதலளித்தவீர மயிலோனே; மாடமதில்முத்துமேடை கோபுரமணத்தசோலை வாகுளகுறட்டிமேவு பெருமாளே.

பொது.

௬௰. தனதனதானத்தானன தனதனதானத்தானன
தனதனதானத்தானன—தனதான.

முகமயூரச்சேவக குறமகளாவற்பூதர முகுளபடீரக்கோமள முலைமீதே; முழுகியகாதற்காமுக பசுபதிபாசத்தூய்வினை முதிபுராரிக்கோதிய குருவேயென்; றுருகியுமாடிப்பாடியு மிருகழலடிச்சூடியு முணர்விலொராடிக்கூடியும் வழிபாடுற்;றுலகிலோராசைப்பாளற நிலைபெ

றுஞானத்தாலினி யுனதடியாரைச்சேர்வது மொருநாளே; மருகனெனுமற்சூழ்கெலை கருதியமாமப்பாதகன் வரவிடுமாயப்பேய்முலே பருகாமுன்; வருகரியானைக்கோடவை திருகிவிளாவிற்காய்கனி மதுகையில்வீழச்சாடியவிமார்புட்; பொருதிருள்சோரப்பாரிய மருதிடைபோயப்போதொரு சகடுதையாமற்போர்செய்து விளையாடி; பொதுவியர்சேரிசேவலர் புயல்மறுகாவச்ராயுத புரவதிபாபுத்தேளிர்கள் பெருமாளே.

திருவாலங்காடு.

கூக. தனதன தானந்தாத்த
தனதன தானந்தாத்த
தனதன தானந்தாத்த—தனதான.

வடிவதுநீலங்காட்டி முடிவிடுகாலங்கூட்டி வரவிடுதூரங்கோட்டி விடுபாச; மகனெடுமாமன்பாட்டி முதலுறவோகுங்கேட்டு ளழிதரமாயந்தீட்டி யயிர்போலே; படிமிசைநாளுங்காட்டி யுடலுறுநோய்பண்டேற்று பழவினைபாவந்தீர்த்து னடியேனைப், பரிவொடுநாளும்பார்த்து விரிதமிழாளுநிலத்தர் பரர்புகழ்காடின்முட்கொண் டருள்வாயே; முடிமிசைசோமன்சூட்டி வளவுளவாலங்காட்டி முதிர்நடமாடுங்கூத்தர் புதல்வோனே; முருகலர்தாமஞ்சூட்டி யொருதனிவேபன்காக்க வருதிருமாலுந்தோற்க வசைகூறி, இடியதெம்மோகங்கூட்டி நெடிதருகுல

ந்தீட்டி யெதிர்பொரு சூரன்றுக்க - வரலோடு, மிலகி யவேல் கொண்டேற்ற வுடலிருகூறன்றுக்கி யிமையவ ரேதந்தீர்த்த-பெருமாளே.

திருப்பழனிமலை.

கூ௨. தனனதனன தனனதனன
தனனதனன-தனதான

தமருமனேயுமரசுமினியதனமுநிலேயு-மிவைபோகத் த றுகண்மமலி முறுகுகயிறுதலேயைவளேய வெறியாதே, க மலவமலநடனவுபயகனகமணிகோ-ளிருபாதங், கருதவெ ளியெனதுதனிமைகழியவறிவ-தரவேணும், குமரசமரபு ரியின்முருககுலவுபழநி-மலேயோனே, கொடியகிரியைமு டியமுடுகுகுறவாசிறுமி-மணவாளா, வமரரிடமவுண ரு டலுமழியவமர்செய்-தருள்வோனே, யறமுநிலமு மயிலு மியனுமழகுமுடைய-பெருமாளே.

திருக்குராவடி.

கூ௩. தனதத்தானன தனதன-தனதான

மருக்குலாவிய மலரணேகொதியாதே வளர்த்தாய் தவ ர் வசையதுமொழியாதே, கருக்குலாவியவயலவர் பழியா தே, சட்டப்பமாலேயையினிவரவிடவேணும், தருக்குலா விய கொடியிடை மணவாளா, சமர்த்தனேமணி மரகத மயில்வீரா, திருக்குராவடி நிழறனி லுறைவோனே, தி ருக்கைவேல்வடி வழகிய-பெருமாளே.

பொது.

கூச. தனதனதந்தத்தத் தனதனதந்தத்தத
தனதனதந்தத்தத் தனதான

பொழிநிறங்கறுத்து மகரவினங்கலக்கி முடியவளந்தி
ளைத்த கடலாலே, முதிரவிடம்பரப்பி வடவைமுகந்தழ
ற்குண்முழுகியெழுந்திருக்கு-நிலவாமோ, மழையளகந்த
ரித்தகொடியிடைவஞ்சியுற்ற மயலில்மனந்திளைத்து-விட
லாமோ, மரகததுங்கவெற்பில் விகடநடங்கொள்சித்ர ம
யிலுவந்துநித்தம்-வரவேணும், அழகியெனுங்குறத்தி பு
ழுகியல்சந்தனத்தி யமுததனம்புதைத்த திருமார்பா,
வருணைவளம்பதிக்கு மழகிய செந்திலுக்கு மமரர்தலங்க
ளுக்கு மிறையோனே, எழு புவனம்பிழைக்கவசுரர்சிறந்
தரித்தவெழுசயின் தொளைத்த-கதிர்வேலா, விரவியொட
நசரத்தராகரிபங்கயத்த ரிவர்கள் பயந்தவிர்த்த-பெருமா
ளே.

திருவருணை.

கூரு. தனதனதனதன தனனதனதனதனதன
தனனதனதன-தனதான.

இறுகுமணிமுலைமருவுகாளமு மெரியுமெழுமதிநிலவா
லே, யிரவிலெனதுயிர்கபர்வருகுயி லிசையுமுறு கடலலை
யாலே, தறுகணபதிமத னனவிடுகொடுசரமுமினியெனை-
யணுகாதே, தறுணம்மணிபொழிலருணைநகறுறைசயில
மிசையினில்-வரவேணும், முறுகுதிரிபுரமறு குகனெழ

முறுவலுடையவர்-குருநாதா, முடியகொடுமுடி யசுரர் பொடிபடமுடுகுமரகத-மயில்வீரா, குறவர்மடமகளமிர் தகனதன குவமெடுமொரு திறுமார்பா, கொடியசுடரிலே தனையுமெழுகடல குறுகவிடவல பெருமாளே.

௯௬. தனனத்தத்தத் தத்தத்தத்த தனதன
தனனத்தத்தத் தத்தத்தத்த தனதன
தனனத்தத்தத் தத்தத்தத்த தனதன-தனதான.

கமலமொட்டைக் கட்டழித்துக் குமிழியைநிலைகுலைத் துப்போற்குடத்தைமதனியகலசவர்க்கத்தைத்தகர்த்துத் தலையற-விளநீரை; உறவிவட்டப்பிற்றூரத்திப் பொருதவ சயம்விளைத்துச் செப்படிப்பித்துலவியகரி மருப்புக்கொ டித்துதிரண்மதனபிஷேகம்; அமலர்நெற்றிக்கடுமையின டனமிட்டச்சப்படுத்தி சபதமொ டிருதாள; மறைதல்க பித்துப்பொருப்பைக்குலவிய சிறகறுப்பித்துக் கதித்து ர்புடைபடமெபிநவச்சித்ரத்தனத்துதிருவடிகளுறவாமோ, தமிரமிக்குற்றுக்கலக்கப் பலபறைதொகு தொகுத்தொக் குத்தொகுக்கத் தொகுதொகுதரிகிடதத்த தத்தரிக்கத் தரிகிட-வெனமோதி; சடவுடற்பக்கப்பழுத்துப்புகையெ ழு விழிகளுஞ்செக்கச்சிவத்துக் குறளிகள்தசைகள்பட்சி த்துக்களித்துக் கொழுகடுகழுகாட; அமரில்மெத்தக்கொ

க்கரித்துப்பொருதிடுமசுரரத்தத்திறகுளித்துத்திமியென வடிஈடித்திட்டுக்கைகட்டிசமர் செயுமயிலான; வழகுமிக் குச்சித்திரப்பொம்புரவி யினுலகிர்த்தக்கொற்ற சித்துங் குருபரவருணையிற்சித்தத் தெனக்குத்தெளிவறுள் பெருமாளே.

பொது.

௯௭. தனத்தத் தானத-தன தான.

கருப்பத்தூறிபபிறவாதே கனக்கப்பாடுற்றுழலாதேதிறுப்பொற்பாதத்தநுபூதி; சிறக்கப்பாலித் தருள்வாயே; பரப்புற்றுறுக்குரியோனே பரத்தைப்பாறுக் கணியோனே; திரக்கைச்சேவற் கொடியோனே செகத்திற்சோதிப் பெருமாளே.

திருவிடைமருதூர்

௯௮. தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனு தானதானனு
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனு தானதானனு
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனு தானதானனுதனதன தனதான.

அறுகுதுனிபனியனை யறியதுளிபெறுகி யொருவாசுமாகியோர் பாலரூபமாயறுமதலை குதலைமொழி தனிலுருகியவருடைய வாயிதாதையார் மாயமோகமா யறுமையினிலறுமையிட மொளுமொழிஎன வுடல்தளர வா

றுமாறுமாய்வாலரூபமா யவருமொறுபெரியோரா யழகு
பெறநடையுடையதிறுதுபடமொழிபழகி யாவியாயவோ
ர்தேவிமாறுமாய் விழிசுவறவரிவையர்கள் படுகுழியைநி
லைமையென வீடுவாசலாய்மாடகூடமாயணுவளவு தவிடு
மிகள் பிதிரவிடமனமிறுகி யாசையளரா யூசிவாசியாய்வி
கிற சுடர்போலே; வெறுமிடிக ளொருதவசியமுறுபடை
யெனுமளவில்மேலைவீசிகேள்கிழைவீடுகள் திடுதிடென
நுழைவதனமுனெதிர்முடுகி யவர்களொடுசீறிஞாளிபோ
லேறிவீழ்வதாய் விரவிநெடுவருபொருள் சுவரியிடவ
னுகிவெறு நுணியார்சொலே மேலதாயிடர்விதிதனை நி
னைவாதே; மினுகுமினுகெனுமுடல மனமுறுகியிறுகவ
ர வீணர்சேவையா ருனுபாவியாய் மறுமையுளதெனும
வரை விடும்விழலையதனில்வருவார்கள் போவெனுகாணு
மோவெனு விடுதுறவுபெரியவரைமறையவரை வெடுவெ
டெனவேட மேசொலிஞாளிவாயராய் மிரையுருவருநா
ளில்; வறுமைமகலமுடுகிவர வுறுபொருளுநழுவகில வா
தமுதுகாமாலை சோகைநோய்பெறுவயிறு வலிபடுவன்வ
ரவிழிகள் பீளைசாரிடா வீளைமேலிடாவழ வாடியூநெலா
நாடிபேதமாய் மனையவுள்மனமவேறு யமனுகுமனுகெ
னுதனையி லனுதினமு மனையுமொருமாதரசிபெனுவால

ஓயெனுகனவு கனிலிரதமொடுகுதிரை வரவரநெடிரசுடு காடுவாவெனு வீடுபோவெனுவலகழிய விரகழியவுரைகுழறிவிழிசொருகி வாயுமேலிடாவாவிபோகுநாள் மனிதர்கள் பலபேச; இறுதியிதொடறுதியென வுறவின்முறை கதறியழ வேழைமாதரார் மோதிமேல்விழவெந்துடமையெனுமறிவுறிதுமறவீழுலோவேனுவாயையாவெனு விடுகுபறைசிறுபறைகள் திமிலையொடுதவிலறைய வீமதேசமேபேய்கள்சூழ்தராவெறிதனிலிடுவ் வாழ்வே; யிணையடிகள்பரவுமுந்தடியவர்கள் மிகவுமெனையேசிடார்களோ பாசநாசநேயிறுவிளையு மலமுமறவிறவியொடு பிறவியற வேகபோகமாய் நீயுநானுமாயிறுக்கும்வகை பரமசுகமதனைபறுளிடைமறுதி லோகநாயகா விமையவா பெருமாளே.

திருக்கரபுரம்.

௯௫. தனதனத் தனதனத் தனதனன
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத்தனதனத்-தனதான

ஒருவரைத்தனிமனைச்சயனமெத்தையினில்வைத்தொருவரைத் தமறலைக்கடையினிற்சுழலவிட் டொருவரைப்

பரபரப்பொடுதெறுத்திரியவிட் டினிதாக; ஒருவரைத்த
மதனைக்கறுகுரப்புணரவிட்டொருவரைப் பரவசப்பட
வுடற்றழுவலுற்றுயிர்பிழைப்பது கழுத்தளவுமுப்பச்செ
னச்செயுமாலுர்; தருமயற்றரமை தனித்தவநெறிக்கய
லெனச்சரியையிற்கிரியையிற்றவமு மற்றெந்துகைத்தநம
வத்தினிலிறைத்தெவரு மூற்றிகழ்வுரத்திரிவேளைச்; சக
லதுர்குளிமறச்சகலசற்குணமுறத்தரணியிற்புகழ்பெறக்
கருணையுற்றுநது பொற்சரண மெப்பொழுது நட்பொடு
நினைத்திடவருட்டருவாயே, குருமொழித்தவமுடை பபு
லவரைச்சிறையில்வைத்த றவுமுக்கிரம்வளைத்திடு மரக்க
ரைமுழுக்கொடிய துர்க்குணவத்தறை பு தற்றுரிசறுத்
திடும்வேலா; குயின்மொழிக்கயல் விழித்துவரிதழ்ச்சிலை
நுதச்சிறுநுதற்சசிமுகத்தில் நகைத்தனகுழற்றன கிரிக்
கொடியிடைப்பிடிநடக்குறமகட்டிருவினைபுணர்வேனே;
கருதுகட்சமயர்கட்கணியறக் கவையுடைப்பறிதலைச் சம
ணரைக்குலமுதற்பொடுபடக்கலகமிட்டுட லுயிர் ககழுவி
னுச்சியினில்வைத்திடுவோனே கதுகினிற்குலையறக் கத
லைப்பற்கனியுகக்கழையின்முத்தமுதிரக் கயல்குதித்துலவு
நற்கனவெயிற்றிகள் திருக்கபுரத்தறுமுகப்பெருமாளே.

விநாயகமலை.

௱. தனதன தானனதனனதனதன தானனதானன
தனதன தானனதானன-தானதன.

சரவணசதாநமோநம கருணையதேவாநமோநம சதத
ளபாதாநமோநம வபிராமகருணைசகாய நமேநம நிருபந
ல்வீரா நமேநம சமதளவூராநமோநம சகதீசா பரமசொ
ரூபாநமோநம சுரபதிபூபாநமோநம மரிமளநீபா நமோ
நம வுமைகாளிபகவதிபாலாநமோநம விகபரமுலாநமோ
நம பவுருஷசீலா நமோநம வருடாரராய் உரவியு மாகார
பூமியும்மதியமும்வாழ்வாக வானவரெவர்களு டேடறவே
ழ்கடன் முறையோவென் றிடர்படமாமேருபூதரமடிபட
வேதாநிசாசரரிகல்கெடமாசேனைமேலயில் விடுவோனே,
மரகதவாகாரவாயனு மிரணியவாகரவேதனும்வசுவெனு
மாகாரவீசனு-மடிபேண; மயிலுறைவாழ்வே விநாயகம
லையுறைவேலாமகாரதவனசரராதாரமாகிய-பெருமாளே

திருப்புகழ்-௱-பாடல்

முற்றிற்று.

—*—